Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 12-6-1948 சனிக்கிழமை மலர் 40.

கிராமத்தான் கூற்று

★

"நமுவி"

சுதந்திரம் வந்ததின்னு சொல்லிக்கிறாங்க—எல்லாம்
சுகப்படப் போறோமின்னு எண்ணிக்கிறாங்க
வதங்கிடும் ஏழைகளை வாழவைக்காங்க—இங்கே
வந்துவந்து கூட்டம்போட்டு வாயளப்பாங்க.

எலக்ஷனு வந்துவிட்டா ஓடிவாறாங்க—இந்த
ஏழைகளைக் கையக்காலைப் புடிச்சுக்கொள்றாங்க
அலைக்காத்தப் போலவீதி அலஞ்சுவாறாங்க—அர
சாட்சிவந்தா எங்களையே மறந்துபோறாங்க

விப்பனை வரியின்னு வெளிக்குச்சொன்னாங்க—அங்கே
வாங்கப்போனா வரியைநம்மை வைக்கச்சொல்றாங்க
இப்படியும் காலம்வரா தின்னுசொன்னாங்க—நாங்க
வந்துவிட்டா எல்லாஞ்சரி யாயிடுன்னாங்க

சொந்தசர்க்கார் இல்லையேன்னு சாக்குச்சொன்னாங்க—இப்போ
எந்தசர்க்கார் இந்தவிதம் செய்யுதெம்பாங்க
மந்தமாக மந்திரிமார் வேலைசெஞ்சாலும்—ஏழை
மக்களுக்கும் வயிறுஉண்டு மறக்கவேணாங்க!

பெண்கள் பகுதி:

யார் முக்கியம்?

"தோழியர் கமலம்"

★

"சக்தி பெரிதா சிவன் பெரிதா" என்று வாதும் வழக்கும் ஆடுவர் அதிதீவிர சைவர். ஆனால் அதன் பிறகு 'ஹரி பெரிதா சிவன் பெரிதா' என்று அடித்துக் கொள்வர். இவ்வாறே முற்போக்கோடு போராடுவர் ஹிந்து மதவாதிகள்.

ஆனால் அவர்கள் வாதுக்கும் வழக்குக்கும் விடை தருவது, அது முடிவு பெறுவது பெண்ணான சக்திதான். சமயத்திலும் முதலிடம் பெற்றது பெண்தான். 'ஆண் பெரிதா பெண் பெரிதா' என்று சந்தேகத்தோடு தத்துவம் பேசுவர் சாதாரண மக்கள். ஆனால் அவரவர்களும் ஆணில்லாவிடில் பெண்ணில்லை என்றும், பெண்ணில்லாவிடில் ஆணில்லை யென்றும், கடவுள் இல்லாவிடில் இவர்கள் இருவரும் இல்லை யென்றும், சமயத்தையும் இழுத்துக் கொண்டு பேசுவர். இது உலக வழக்கம். எத்தனையோ பேர் எங்கெங்கு நாட்டிலெல்லாம் இன்றும் வீரம் செறிந்தவர்களாகப் பெண்கள் வாழும் பொழுது, நம் தென்னாட்டில் மாத்திரம் ஆண்களுக்கு அடிமையாய் இயந்திரமாய் இருக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? என்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் உந்தியெழவேண்டும் ஒரு சந்தேகம். பலநூற்றாண்டுகளுக்கு முன் ஆண்களும் பெண்களும் சம உரிமையாய் வாழ்ந்து வந்தனர் என்று, ஏட்டுச்சுவடிகள் எடுத்தியம்புகின்றனவே. ஒரு சிறு கும்பல்—பிழைக்க வந்த பித்தலாட்டக் கூட்டம்—நஞ்சு கலந்த மொழிகள் பேசி நயமாக வஞ்சித்த கூட்டம்—சொல்வதை யெல்லாம் கேட்டு, வீரமுடன் உரிமையுடன் வாழ்ந்த பெண் மக்களை கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் ஆண்களுக்கு அடிமை யென்றும், நாணம், மடமை இவைகளைக் கைக்கொண்டு அதன்படி நடக்கும் அளவுக்குத் தூண்டி எழுதப்பட்ட புராணம் 'இதிகாசம்' மனுதர்ம சாத்திரம் இவைகளால் குருட்டு நம்பிக்கையுற்று, நலிவு பெற்று அடிமையாய் வாழ, அரைப்பட்டினியாய்ச்சாக வழி செய்து கொண்டனர். அதை இன்றும் எல்லாப் பெண்களும் நம்பி வீட்டைவிட்டு வெளியில் வராமல், அடுப்பூதும் பழக்கத்தையே கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால் மிகச் சிலர் இதை மாற்றியமைக்க, பெண்களும் சமஉரிமையாய் வாழ வழி செய்ய, கல்வி கற்கத்துணிந்து கலாசாலைக்குச்சென்றால், பெண்களை அடிமைப்படுத்திய அகங்கார இனம், பெண்கள் விடுதலையாய் வாழ விவேகம் வந்து விட்டால் ஏமாற்றும் பழக்கம் இனி இல்லாதே! தமது பேச்சுச் செல்லாதே! இது தங்களுக்குப் பொல்லாதே! என்று எண்ணி, கலாசாலையில் படிக்கும் பெண்களையெல்லாம், சமவுரிமையுடன் பழகும் சகோதரிகளை யெல்லாம், விபசாரி என்று சொல்லி ஏளனம் செய்கின்றனர். இதைக் கேட்டு ஒன்றிரண்டு ஆண்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவும், பல பேரிடம் பழகவும் அனுமதி அளிக்காது முட்டுக்கட்டை போடுகின்றனர்.

வருங்கால மக்களைப்பெற்றுப் பாலூட்டிச் சீராட்டி, வளர்ப்பது ஆணா பெண்ணா? பெண்கள் சீரிய முறையில் செம்மையுடன் அறிவு பெற்றிருந்தாலல்லவோ தங்கள் குழந்தைகளுக்கு உணர்ச்சிப்பால், ஊட்ட முடியும்—சிந்தனைச் சிற்பிகளாக ஆக்கமுடியும். இது தெரியாது இன்னுமா நம் பெண்மக்கள் வாழையடி வாழையாய் அறியாமையால் அடிமைப்பட்டு வாழ்வது? தனக்கு இஷ்டப்பட்ட காதலனைத்தான் காந்தர்வவிவாகம் செய்து கொண்டனர் என்று அக்காலக் கதைகளெல்லாம் கூறுகின்றனவே. ஆனால் இப்பொழுதோ காதலன் இன்னாரென்று தெரியாத பெண்மகளை மணக்கோலத்துடன் உட்காரவைத்துத் தாலி கட்டச் செய்து வலுவில் வாழச் செய்கின்றனர்!

கட்டாய மணம் அல்லவோ செய்கின்றனர்! இப்படி அவர்கள் செய்வது, அவர்கள் குற்றமுமல்ல, குறையுமல்ல. அவர்களை அவ்வழியில் செலுத்துகிறது சமூகம்.

ஆகவே தோழியர்களே! இது மாதிரி பெண்களுக்குத் தடை விதிக்கும், பெண்களை அடிமையாக்கும் சமுதாயத்தைத் தொலைத்து அதை அழிக்க அனைவரும் ஒன்றுகூடி, பெண்கள் சங்கங்கள் ஏற்படுத்தி அடிமையின்றி வாழ, விடுதலையாய் உரிமையுடன் வாழ வழி வகுப்போம். ஆனால் இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் மாதர் சங்கம் என்ற பெயரில், அரசாங்கச் சலுகைபெற்று நம்மை ஒன்றுகூட வைக்கச் சிலர் உழைக்கின்றனர். அவர்கள் நமது அடிமையை அகற்றப் பாடுபடவில்லை. தாங்கள் வாங்கும் சம்பளத்திற்கு வேலை செய்கின்றனர். ஆகவே அதில் ஒருவரும் சேராது, நம் கவலையைத் தீர்க்க, நாம் உன்னத இடம் பெற, நம் அறிவைப்பெருக்க, ஆற்றலோடு எந்தவிதமான கூலிக்கும் வேலை செய்யாது, உணர்ச்சியுடன் தங்கள் இனத்தைத் தலை நிமிர வைக்கத் தகைமையுடன் வேலை செய்வோம். அப்படி வேலை செய்வதைத் தடுக்கும் எந்த முட்டுக் கட்டையையும் தகர்த்தெறியத் துணிவோம்.

★

வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு.

13-6-48ம் நாள் மதுரை அழகரடி 1வது பிள்ளைமார் சங்கக் கட்டிடத்தில் தோழர்களான எஸ். முத்து—ரஞ்சிதம் அவர்கள், தோழர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்திக்கொள்வார்கள்.

தோழர்கள் இதனையே அழைப்பாகக்கொண்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

உறவினர்கள்.

★

வாழ்வுக்கு ஒப்பந்தம்.

நீடாமங்கலம். 4-6-48.

தோழர்கள் நடராசன்—சானகி அவர்களின் வாழ்க்கை ஒப்பந்தம் குடந்தை தளபதி கே. கே. நீலமேகமவர்களின் முன்னிலையில் இன்று நடைபெற்றது. சீனிவாசனும் பல தோழர்களும் பேசினார்கள். திருமண நினைவாக "விடுதலை" "குடிஅரசு" க்கு முறையே ஒரு ரூபாய் நன்கொடை அனுப்பப்பட்டது.

எல்லாம் பார்ப்பனமயம் ஜகத்

இதுதான் தமிழகத்தின் தலைவிதியா?

★

தமிழ் நாட்டைப் பார்க்கும்போது சிரிப்பதா அழுவதா என்பது தெரியவில்லை. எந்தத்துறையிலும் தமிழன் பின்னணியில் நிற்கிறான். முற்போக்கு எண்ணமே சிறிதும் இல்லை. பார்ப்பனீயத்துக்கு மண்டியிட்டு அதன் மாய்கையில் சொக்கிக்கிடக்கிறான் தமிழன். தமிழன் என்றால், பணக்காரத் தமிழனையும் பதவியில் உள்ள தமிழனையுந்தான் குறிக்கிறேன். பணக்காரர்களும், பெரிய உத்தியோகத்தில் உள்ளவர்களும், பார்ப்பனீயத்தின் வலைக்குள் விழுந்து, பார்ப்பனீயத்துக்கு எல்லா வகையிலும் ஆதரவு கொடுத்து வருவதோடு, தமிழரின் நலத்துக்குப் பாதகமான காரியங்களைச் செய்தும் வருகிறார்கள்.

தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு பணக்காரனிடத்திலும், பார்ப்பான் எந்த வகையிலும் தொடர்பு வைத்துக் கொண்டு, அவர்களைத் தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கிறான். ஜமீன்தார், மிராசுதார், பரம்பரைப் பணக்காரன், நேற்றைய பிளாக் மார்க்கெட் பணக்காரன் முதலிய எல்லாரிடத்திலும், பணம் வைத்திருக்கும் தமிழன்எல்லோரிடத்திலும், பார்ப்பான் உறவு கொண்டாடுகிறான். பார்ப்பான் உறவு இல்லாத ஒரு பணக்காரனைக் காட்டுங்கள் பார்ப்போம்! அதுபோலவே, உத்தியோகப் பதவியில் இருக்கிற தமிழர்களிடத்திலும் பார்ப்பனீயம் எந்த விதத்திலோ நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு, தமிழ் நாட்டில் உள்ள அதிகாரத்தன்மையையும், பணக்காரத் தன்மையையும் பார்ப்பனீயம் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு தனக்குச் சாதகமாகக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. இது எல்லோரும் அறிந்த பகிரங்க இரகசியம்.

பணம் படைத்த சமூகமாகிய நகரத்தார்களை எடுத்துக் கொள்ளுங்கள். ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் முதல் மற்ற எல்லாச் செட்டியார்களிடத்திலும் பார்ப்பனீயம் மிக மிக நெருங்கிய உறவு கொண்டாடுகிறது. ஏனைய பிரபுக்கள், பணக்காரர்கள் எல்லோரையும் எடுத்துக் கொள்ளுங்கள். பார்ப்பனீயத்தின் உறவை, தயவை, சிநேகிதத்தை, கூட்டை, தொடர்பை, ஒத்தாசையைப் பெறாத பணக்காரர்கள் யாரேனும் உண்டோ? அப்படி யாரேனும் இருந்தால் அவர்கள் தமிழ் நாட்டிலே ஒரு அதிசயப் பிறவி என்றுதான் சொல்லுவேன். பெரியார் ராமசாமியைச் சொல்லாதீர்கள். அவர் இதற்கு விதி விலக்கானவர்.

இதுபோலவே, பெரிய உத்தியோகத்திலே, பதவியிலே, அதிகாரத்திலே இருக்கிற தமிழர்களிடத்திலும் பார்ப்பனீயம் மிக மிக நெருக்கமாகக் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறது. ஆர். கே. ஷண்முகம், சர். ராமசாமி முதலியார், இலட்சுமணசாமி முதலியார் முதல் ஜில்லா போர்டு பிரஸிடெண்டுகள் வரையில் உள்ள எல்லாத் தமிழர்களிடத்திலும் பார்ப்பனீயம் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. பார்ப்பனீயத்தின் கைக்குள் அகப்படாத பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களும் இல்லவே இல்லை! சத்தியமாய்ச் சொல்லுகிறேன். ஒருவர்கூட இல்லை.

பணமும் பதவியும் பார்ப்பனக் கூட்டுறவில் உறவு கொண்டு இருக்கும்போது, ஓ திராவிட வாலிபரே! நீங்கள் என்னென்னமோ செய்ய வேண்டுமென்று கனவு காண்கிறீர்களே, அது எப்படி முடியும்?

பணக்காரத் தமிழர்களும், பதவியில் உள்ள தமிழர்களும் பார்ப்பனீய மாயைக்குள் சொக்கிக் கிடக்கிறார்கள் என்று சொல்லும்போது, இவர்கள் வேண்டுமென்றே பார்ப்பனீயத்தைத் தேடிக் கொண்டுபோய் அதில் வீழ்ந்து தவிக்கிறார்கள் என்று சொல்வதாகக் கருத வேண்டாம். பணக்காரனையும், பதவியுள்ளவனையும் பார்ப்பனீயம் தானே தேடிக்கொண்டு வரும். பணமும் பதவியும் போய் விட்டாலவர்களைப் பார்ப்பனீயம் திரும்பியும் பார்க்காது. தேன் உள்ள பூக்களிடத்தில்தானே வண்டுகள் போகும். தேன் வறண்டு போன பூக்களிடத்தில் வண்டுகள் போகாதே. பணமுள்ளவரையில் தானே தாசிகளின் நேசமும், பாசமும். பணம் வறண்டுபோன பிறகு அவர்களைப்பற்றித் தாசிகளுக்கு என்ன கவலையும் அக்கரையும்? அதுபோலத்தான் பார்ப்பனீயம், தமிழ்ப் பணக்காரர்களையும், பதவியில் உள்ளவர்களையும்தானே தேடிக் கொண்டு வந்து மொய்த்துக்கொள்ளும். பார்ப்பனீய வண்டு எப்படி மொய்க்கும் தெரியுமோ? அதுதான் பார்ப்பனீயத்தின் சாமர்த்தியம். கூறுகிறேன் கேளுங்கள்.

ஒரு பணக்காரரை அல்லது உத்தியோகஸ்தரை, பார்ப்பனீயம் மொய்க்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலில், அந்தப் பணக்காரர் அல்லது உத்தியோகஸ்தர் எப்படிப்பட்டவர், எப்படிப்பட்ட சுபாவம் உள்ளவர், என்பதை மெல்லமெல்லச்சோதித்துத் தெரிந்து கொள்ளும். அவர் சிற்றின்பப் பிரியராக இருந்தால் (பெரும்பாலும் இப்படித்தான் இருப்பது வழக்கம்) அதற்குத்தக்கபடி பார்ப்பனீயம் நடந்துகொள்ளும். சங்கீதப்பிரியராகஇருந்தால், அல்லது சாப்பாட்டுப் பிரியராக இருந்தால் அந்தந்த விதத்தில் திருப்திப்படுத்தும் பார்ப்பனீயம். யார் யாருக்கு எதில் எதில் இஷ்டமோ அப்படி அப்படியெல்லாம் திருப்திப்படுத்திப் ,பார்ப்பனீயம் அவர்களைத் தன் வசப்படுத்தும்.

மண்ணாசையுள்ளவர்களுக்கும், பொன் ஆசை உள்ளவர்களுக்கும் அவைகளைக் கொடுத்துத் திருப்திப்படுத்துமே' பார்ப்பனீயம் என்று கேட்காதீர்கள். மண், பொன், பெண் என்னும் மூன்றில், பெண்ணைக் கொடுத்தாலும் கொடுக்குமே தவிர உயிர் போனாலும் மண்ணையும் பொன்னையும் ஒரு போதும் கொடுக்காது பார்ப்பனீயம். மண்ணையும் பொன்னையும் பெறுவதற்காகத்தானே பார்ப்பனீயம் இவர்களிடத்தில் உறவாடுகிறது! சிலசமயத்தில் பொன்னையும் பொருளையும்கூட பார்ப்பனீயம் சிறிதளவு கொடுக்கும். எதற்காக யாருக்காக என்றால், திராவிடக் கழக மாநாட்டுப் பந்தலுக்கு நெருப்பு வைக்கவும், கருப்புச்சட்டை யணிந்தவர்களைப் பொய்

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

போற்றவேண்டியது யாரை?

★

கண்ணப்பன், சிறுத்தொண்டன்— இருவரும் அரனன்புடையோர். கருமாலும் காணாத எருதேறும் ஈசனை நினைந்து கண்ணீர் மல்கும் இயல்பினர். மாதொரு பாகனாரின் மதியணி சடையை, சடையுறு நீரை, நீறணி மேனியை நினைந்துருகிடும் நீர்மையர். காலெடுத்தாடிக் காளியை வென்றோய், கண்டனுக்காகக் காலனைக் கடிந்தோய், பன்றிக்கும் பாலீந்த பரமா, குருகுக்கும் அருளீந்த குழகா, நரிபரியாக்கிய நாதா, பிட்டுக்கு மண் சுமந்த பித்தா என்ற முறையிலே அய்யனின் அருளினைப் போற்றிப் புகழ்ந்திடும் பண்பினர். ஆலவாயண்ணலின் அருள்பெற்ற சீரியர்.

கண்ணப்பன், சிறுத்தொண்டன்— இருவரும் மக்களுக்கு வழி காட்ட வந்த தொண்டர்கள் எனப்படுகின்றனர். மக்களினம் உய்ய ஒரு வழியுரைத்த உத்தமர் எனப்படுகின்றனர். மக்களினம் வாழ ஒரு வழிவகுத்த வள்ளல்கள் எனவழங்கப்படுகின்றனர். சிம்ஸனும், லெஷியரும் எங்ஙனம் உண்மையாகவே மக்களுக்குத் தொண்டுபுரிந்தனர் என்பதைச் சென்ற இரு கட்டுரைகளில் கண்டோம். இக்கட்டுரையில் கண்ணப்பனும், சிறுத்தொண்டனும் மக்களினத் தொண்டர்களா, தொழுநோய்க் கிருமிகளா என்பதைப் பார்ப்போம்.

மகனைக் கொன்று கறிசமைத்த மாபாவிச்சிறுத்தொண்டனெங்கே? உயிரீந்து உலகை வாழ்வித்த உத்தமன் லெஷியர் எங்கே? கண் கொடுத்தும் பல்வேறு நோய்களுக்குக் காரணமான கொசுக்களையும் கிருமிகளையும் கண்டுணர்த்திய மேன்ஸன் எங்கே? கண் மிகவும்கெட, கண்ணிடந்தெடுத்து விட்டால்தான் உயிருக்கு நல்லதென மருத்துவன் முடிவுகூற, அங்ஙனமே கண்ணெடுக்கப்பட்டுப் பீங்கான் கண் வைத்தப்பி, கண்ணுள்ளது போலவே செய்யும் ரணசிகிச்சை முறைக்கு இன்றியமையாது வேண்டப்படும் க்ளோரபார்மைக் கண்டுணர்த்துவதற்காகக், கணக்கிலா முறைகள் காலனூரின் வாயிலை யணுகி யணுகிமீண்ட அறிஞன் சிம்ஸனெங்கே? கல்லுக்குக் கண்ணிடந்தப்பிய கல்லாத கசடன் கண்ணப்பனெங்கே?

சிவன் மீது காதல் சிறுத்தொண்டனுக்கு. அதனால் அரனடியாரிடமும் அன்பவனுக்கு. உண்மை. எனவே ஒருநாள் சைவ வேடம் பூண்ட ஒருவன்வந்தானாம் சிறுத்தொண்டன் வீட்டிற்கு. கேட்டானாம் தாய்க்கு ஒரு மகனின் கறியை. தன் ஒரே மகனான சீராளனைப் பள்ளியினின்றும் அழைத்து வந்து, அறுத்துத் துண்டித்துச் சமைத்தானாம் சிறுத்தொண்டனாகிய அப்பெரும் பக்தன். வன்னெஞ்சக் கொடியோன் கூடச் செய்யத் துணியாக் கொடுஞ்செயல். ஆனாலும் அவன் பெருந்தொண்டனாம். அன்பே சிவமெனும் கொள்கையனாம். தன்மகனின் தலையைப் பிடித்தறுத்த தாயின் மார்பினுள் இதயம் இருந்ததோ, இல்லையோ தெரியவில்லை.

சிறுத்தொண்டன் உண்மைச் சைவனாக இருந்திருந்தால், வந்த சிவபக்தனுக்கு அன்பு நெறியைப் போதித்திருக்க வேண்டும். அதுமட்டுமல்ல. 'வந்தவன் மனித இறைச்சியைக் கேட்கிறானே, இவன் உண்மைச் சைவனாக இருக்க முடியுமா?' என்று அய்யுற்றிருக்க வேண்டும். அச்சிறு வேலையைக் கூட அவனது பகுத்தறிவு செய்யவில்லை. இறையன்பு அறிவை அழிக்குமானால் அது அன்பாகாது. ஏனெனில் அறிவு மயமாகத்தானே இறைவன் இருக்கின்றான் என்று கூறுகின்றனர் எல்லாச் சிவனடியார்களும். சான்றாக 'அறிவான தெய்வமே தேசோமயானந்தமே' 'என்னன்பே என்னன்பான அறிவே என்னறிவிலூறும் ஆனந்தவெள்ளமே, என்ற தாயுமானாரின் சொற்களிருக்கின்றன.

நிற்க, வந்தவன் உண்மைச்சைவன் என்பதற்கு என்ன அத்தாட்சி? போலிச்சைவனாக, வேடதாரியாக இருந்திருக்கக்கூடாதா? மனித மாமிசம் புசிப்பதில் வெறிகொண்ட புன்மையனாக இருந்திருக்கக்கூடாதா? அல்லது மூளைக் கோளாறுள்ளவனாக இருந்திருக்கக்கூடாதா? வந்தவன் எத்தகையவன் என்பதைச் சிறிதும் சிந்தித்துப் பார்க்காது, அவன் பூண்டிருந்த வேடத்தினின்றே அவனைச் சைவனென்றெண்ணி, அவன் பிள்ளைக் கறிகேட்க, தன் ஒரே பாலகனின் உயிரைக் கொலைபுரிந்து மாய்ப்பதா? அரிவாமணையில் அறுபடும்போது எப்படிஎப்படித் துள்ளினானோ அப்பாலகன். அதனைச் 'சகித்துக் கொண்டிருந்த அவர்கள் தாய்தந்தையர்தாமா? எவனோ ஒருவனுக்காக (அதுவும் அவன் சிவபக்தன் என்பதற்கொரு அத்தாட்சியுமில்லாதிருக்க) தாம் பெற்றுச் சீராட்டி வளர்த்த சீராளனைக் கொன்ற கொலைஞர்கள் என்று சீராளனின் பெற்றோர் மீது நாம் கொலைக்குற்றம் சாற்றினால் அதிலென்னதவறு?

பகுத்தறிவும், அன்பும் இம்மியளவுமிலாத கொலைஞன் சிறுத்தொண்டனுக்குச் சிவபதம் நல்கினார் மாதொருபாகனார் என்றால், நாம் எப்படி அவரைக் கருணையங் கடல்என அழைக்கமுடியும்? ஒன்று சிறுத்தொண்டனுக்கு அருள் புரிந்தது பொய். அல்லது நஞ்சுடைமிடற்றான் அருளாழி என்பது பொய். ஒருவேளை அரத்தொழில் (கொலைத்தொழில்) புரிபவனுக்குத்தான் அரன் அருளீவான் போலும்! வேண்டுமானால் சிவனை யாம் மன்னித்து விடுகிறோம். ஏனெனில் அவன் சுடலையில் நடமாடும் பித்தன் தானே! தன்பித்த நிலையில் அன்பன் யார், அல்லாதான்யார் என்பதோராது, கொலைஞன் சிறுத்தொண்டனுக்கு அருள்பாலித்திருப்பார் என்று கருதி மன்னித்துவிடுகிறோம். மன்னிப்பதோடு பித்தம் என்றுமே தெளியாதவனும், கொலைஞர்களுக்கருள் புரிபவனுமான அத்தகைய கடவுள் நமக்கு வேண்டியதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிற்க, நாடகத்தில் நல்லவனாக நடிக்கும் நடராசன் வெளியுலகில் மிகத்தீயனாக இருப்பதை நாம் பார்த்ததில்லையா? சாதுவாக நடிக்கும் சந்திரசேகரன் எடுத்ததற்கெல்லாம் சீறிச்சினக்கும் சிறுத்தையாக இருப்பதை நாம் கண்டதில்லையா? பொய்யனாக நடிக்கும் பொன்னன் வாய்மையின் வாழ்விடமாக வாழவில்லையா? அறிவிலிகள் அறிஞரென நடிக்கவில்லையா? விலைமாதுவிமலா கற்புச்செறிந்தகண்ணகியாய் நடிப்பதில்லையா? இங்ஙனம் ஒருமனிதனின் வெளித்தோற்றத்திற்கும் உண்மைத் தன்மைக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறது. முறுவல்பூத்த முகத்தினையுடைய கொடியரை நாம் கண்டதில்லையா? மேலே அப்பழுக்கிலாதிருக்க உள்ளே புழுக்கள் நிறைந்திருக்கும். மாங்கனிகளை நாம் பார்த்ததில்லையா? அப்படியிருக்க, வந்தவன் காஷாயம்தரித்து, உருத்திராட்சம் பூண்டு, நீறணிந்திருந்ததினாலேயே அவனைச் சைவனென்று அறிவு எப்படி உட்கொள்ளமுடியும்? வெண்மையாக இருப்பதாலேயே சுண்ணாம்புத் தண்ணீரைப் பாலென்று கருதி குடிப்பாருண்டோ? வேடத்திலிருந்தே வந்தவன் சைவன் என்று சிறுத்தொண்டன் கருதியது அறிவிலியின் செயல். வந்தவன் பிள்ளைக் கறி கேட்டதற்காகத் தன் மகனையறுத்துச் சமைத்தது கொலைபாதகனின் கோரச்செயல். அப்பெருங்குற்றத்திற்காகச் சிறுத்தொண்டனை மக்கள் பழிக்க வேண்டும்

'கொலைபுரிவார்தவிர மற்றையெல்லாரும் நினது குலத்தாரே,' 'உயிர்க் கொலையும் புலைப் பசிப்பும் உடையவர்களெல்லாம் உறவினத்தார் அல்லர், அவர் புறவினத்தார்; என்ற வடலூர் வள்ளலாரின் வாய்மொழிகட்கும்,

"உடம்பினை முன்னம் இழுக்
கென்று கொண்டேன்,

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ஜாதி இருக்கும் வரை ஜனநாயக ஆட்சி பகற்கனவே!

மத நடுநிலைமை மண்ணாய்ப் போக!

17 ஆண்டுகளுக்குமுன் சண்முகமவர்களின் சமவுரிமை முழக்கம்.

★

[குறிப்பு:—இன்றைய இந்திய யூனியனின் நிதிமந்திரி அவர்கள் அன்று வழங்கிய மதிமிக்க வாசகங்களை இங்கு நாம் நினைவுப்படுத்துகிறோம். ஏன்? இப்படிச் சொன்ன மேதாவி இன்று எப்படியிருக்கிறார்? இதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? அதற்குத்தான். ஆ-ர்]

நமது இயக்கம் நாஸ்திகமன்று.

நமது இயக்கம் நாஸ்திகமா ஆஸ்திகமாவென்பதைநமது இயக்கத்தலைவரான பெரியார் அவர்களே சற்றுமுன்பு இங்கு சொல்லிவிட்டார்கள். ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களும் இயக்கத்தில் பங்கு கொள்ளலாமென்பது பெரியாருடைய கருத்தென்பதை நீங்களே அறிவீர்கள். நான் ஈரோடு மாநாட்டில் கடவுளைப்பற்றிக் கூறுகிற இடத்தில், நாம் கடவுளைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டாமென்று கூறினேன். இது நாஸ்திகமேயன்று. நாஸ்திகமென்றால் அது வெறும் முட்டாள்தனமே யாகும். கடவுளைப்பற்றிக் கவலை கொள்ளாதே என்பதற்கும் அவ்வாறு கூறுவது நாஸ்திகமல்லவென்பதற்கும் புத்தரும் பௌத்த மதமுமே உதாரணங்களாகும். புத்தர் உலகத்திற்கு 'நீங்கள் கடவுளைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டா' மென்றே சொன்னார். அது போலவேதான் நமது இயக்கமும் கூறுகின்றது. மக்களுடைய மூடத்தனத்தை மாற்றவே நேரமில்லாமலிருக்கும் போது என் கடவுளைப்பற்றி யோசித்து நேரத்தை வீணாகச் செலவிடவேண்டும் என்றேதான் நமது இயக்கம் கேட்கின்றது. நமது இயக்கத்தில் ஆஸ்திகர்கட்கும் நாஸ்திகர்கட்கும் ஒன்று போலவே இடமுண்டு. செட்டியார்கள் எல்லோரும் மிகுந்த கடவுள் பக்தர்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் தென்னாட்டில் பல கோயில்களைக்கட்டி முடிக்கிறார்கள். அவர்களுடைய பக்தியைக் குறைகூறவில்லை. ஆனால் அவர்கள் செய்யும் முயற்சி சுயமரியாதையைப் பங்கப்படுத்துகின்றது என்று மட்டிலும் கட்டாயமாகக் குறிப்பிடவேண்டும். லட்ச லட்சமாகச் செலவு செய்து கட்டிய கோவிலில் கும்பாபிஷேகம் செய்து முடித்ததும் உள்ளே போகக் கட்டியவருக்குக்கூடப் பாத்தியதையில்லை. இது சுயமரியாதைக்கு மறுப்பானதா இல்லையா? நான் வடதேசத்தில் பல விடங்களையும்கோவில்களையும்பார்க்கின்றேன். அங்கு நமது தென்னாட்டைப்போல் இவ்வளவு சுயமரியாதை அழிந்திருப்பதில்லை. ஆகையினாலேதான் இந்த தென்னாட்டில் சுயமரியாதை இயக்கம் அவசியமென்றும், அது வெற்றியளிக்குமென்றும் கூறுகிறேன். நிற்க,

சுயமரியாதை இயக்கம் புதிதல்ல.

சுயமரியாதைஇயக்கத்தை ஆராய்ச்சி செய்து பார்த்தால் அது ஓர் புதிய இயக்கம் அல்லவென்பதும் அதன் தத்துவங்கள் புதியனவல்லவென்பதும் புலப்படா நிற்கும். என் புத்திக் கெட்டியவரையிலும் நம் புராணங்களில் அதற்கு அத்தாட்சிகள் பலவிருக்கின்றன. சரித்திரங்களும் பல உண்டு. விசுவாமித்திரர்-வசிஸ்டர் சண்டையை ஆராய்ச்சி செய்து பார்த்தால் அதில் சுயமரியாதை இருக்கின்றதென்பது வெளிப்படும். வசிட்டர் ஓர் "பிர்மரிஷி". அவர் ஒரு காலத்தில் விசுவாமித்திரரை நீ பிர்மரிஷியல்லவென்று சொன்னார். எனவே அவ்குடைய சுயமரியாதை உணர்ச்சி அவரைத் துன்பப்படுத்த அவர் அக்காலத்துக் கொள்கைப்படி காட்டையடைந்து கடுந்தவம் புரிந்து "பிர்மரிஷியாகி" சுயமரியாதையைப் பெற்றார். சரித்திரத்தில் புத்தருடைய உபதேசம் முதலாவது சுயமரியாதை உணர்ச்சிதான் என்பது எனது கொள்கை. புத்தருடைய காலத்தில் இப்போது நமது நாட்டில் காண்கின்ற பல மூடப்பழக்க வழக்கங்கள் காணப்பட்டன. அவை மனிதருடைய சுயமரியாதைக்கு முட்டுக் கட்டை போட்டன. எனவே புத்தர் அவற்றிற்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார். மனிதனை கோவில்கள் புராணங்கள் என்பன அறியாமையிலும் அடிமைத் தனத்திலு மாழ்த்துகின்றனவென்று முதன் முதல் உபதேசம் செய்தவர் புத்தரே. இவ்விதம் புராணங்களையும் சரித்திரங்களையும் பார்த்தால் நமது இயக்கம் புதியதேயல்ல என்று தோன்றும். நமது நாட்டில் பல வருடங்களாக அது இருந்து வந்தது. ஆனால் புரோகிதர்கள் தந்திரத்தினாலும், சாத்திரத்தினாலும் அதனைத் தலையெடுக்கவிடாமல் செய்துவிட்டனர். எனவே சுயமரியாதை இந்நாட்டை விட்டுப் போய்விட்டது.

சுயமரியாதை உதயம்.

அப்பால் எப்பொழுது வந்ததென்றால் சுமார் 50 வருடங்கட்கு முன்னராகும். அப்பொழுது அதன் தோற்றம் சமூகச் சீர்திருத்தமாயிருக்கவில்லை. தேசீய மயமாக விருந்தது. அதனைக் காங்கரஸ் என்ற பெயரால் அழைக்கலானோம். அதனை அரசியல் சுயமரியாதை என்று சொல்லலாம். நெடுநாட்களுக்குப் பிறகு சமுதாயச் சீர்திருத்தமாகப் பரிணமித்தது. இந்த உணர்ச்சி தீவிரமாகச் சென்ற 10 வருடங்களாகப் பரவிவருகின்றது. இவ்வுணர்ச்சியைப் பரப்பியவர் பெரியார் இராமசாமியாரேயாவார். 5—6 வருடங்கட்கு முன்பு மகாத்மா காந்தி எனது வீட்டுக்கு வந்த போது இவ்வியக்கத்தைப்பற்றிப் பேசினேன். அவர் ஏற்கனவே இதனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். அப்போது அவர் என்னிடம் "உங்களியக்கத்தின் தலைவர் யார்" என்று வினவினார். ராமசாமியார் என்று விடையிறுத்தேன். உடனே அவர் தாமும் அப்படியேதான் நினைத்ததாகக் கூறினார். பிறகு ராமசாமியார் சுயமரியாதை இயக்கத்தை ஏன் ஆரம்பித்தார் என்ற பேச்சு வந்தது. அப்போது அருகிலிருந்த ஒரு நண்பர் "அவர் காங்கரசிலிருக்கும் போதுகூட பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி மிகுதியும் இருந்தே வந்தது எனக்குத் தெரியு" மென்று கூறினார். இது முற்றிலும் உண்மைதான். நம் ராமசாமிப் பெரியாருக்கு நீண்ட நாளாகப் பார்ப்பனரல்லாதார் கட்சியில் பற்றிருந்ததை அறிவேன். அதனாலேயே நமது இயக்கம் தீவிரமாகப் பரவிக்கொண்டு வருகிறது. அதன் கொள்கைகள் பல மேடைகளில் முன்னமேயே கூறப்பட்டு விட்டதால் நான் அதிகமாக எடுத்துக்கூற விரும்பவில்லை.

மேல் நாட்டில் நமது இயக்கம்.

கொஞ்சம் முன் இவ்வியக்கம் புதி

தல்லவென்றும், சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால் பல நாடுகளில் இது பரவி வந்திருக்கின்றதென்பது தெரியுமென்றும் கூறினேன். மேனாட்டில் முதலாவது சுயமரியாதை இயக்கம் சமுதாய மத சீர்திருத்தமாகத் தோன்றியது. அஃதாவது கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுடைய தொல்லைகள் பொறுக்க முடியாமல் போன போது மார்ட்டின் லூதர் என்னும் பெரியார் ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். இரண்டாவது சுயமரியாதை இயக்கம் பிரான்சில் அரசியல் கிளர்ச்சியாகத் தோற்றியது. அதிலும்நமது கொள்கைகளே தலை சிறந்தன. பிறகு, 1919ம் வருஷம் ருஷியாவில் புதுமாதிரியான சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தது. அது சமதர்ம இயக்கமாக மாறியது. இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ருஷியா முதலிய நாடுகளில் ஏற்பட்ட இயக்கங்களை ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் மூலாதாரம் நமது சுயமரியாதை இயக்கக்கொள்கைகளேதான் என்பது புலப்படும்.

சுயமரியாதை இயக்கமும் மதமும்.

மத சம்பந்தமான நூல்கள் யாவும் மனிதனுடைய சுயமரியாதை உணர்ச்சிக்கு முரணானவைகளாகும். இதனை நாங்கள் வெளியே எடுத்துக் கூறும் போது பலர் குறை கூறுகின்றனர். ஜாதி பேதம் இந்து மதத்திலிருக்கின்றது. இதனை அகற்று என்று கூறும் போது மதம் அழிக்கப்படுகின்றதே என்றால் அது எங்களுடைய குற்றமல்ல. கடவுள் முன் எல்லா மக்களும் சரிசமானம் என்றிருக்கும் போது நமது நாட்டில் கடவுள் முன் உயர்வு தாழ்வு பாராட்டிக்கொண்டிருக்கையில் அதனை நாங்கள் அழிக்க முயலும்போது கடவுளைப்பழிக்கிறார்கள் என்று சொன்னால் அதன் பொருளென்ன? கடவுளழிந்தால் அதற்கு நாங்கள் பாத்தியதைப்பட்டவர்களா? பெண்கள் உணர்ச்சிக்கு மாறாக மதத்தை வைத்துக்கொண்டு பெண்களுக்கு விடுதலை வழங்குங்கள் என்று கூறும் போது மதம் போய்விட்டது என்று கூச்சல் போட்டால் அதற்கு யார் பொறுப்பாளி? நமது நாட்டுப் பழக்க வழக்கங்களெல்லாவற்றிலும் மதம் வந்து புகுந்து கொண்டுதானிருக்கின்றது. சிலவருடங்கட்கு முன்பு இவ்வூர் இந்துமதாபிமான சங்கத்தின் ஆண்டுவிழாவுக்குத் தலைமை வகிக்க திரு. முருகப்பா என்னை அழைத்தார். அப்போது வரும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. திரு. முருகப்பாவின் அன்றையக் கருத்து மதத்தைச் சீர்திருத்தம் செய்துவிட வேண்டுமென்பதாகும். அத்தகைய அவர் இன்று மதத்தைப்பற்றி மிகவும் மாறுபட்ட ஓர் அபிப்பிராயம் கொண்டிருப்பாரென்றால் நாம் மதம் மதம் என்று கூக்குரலிடுவதில் பயனென்ன? (கரகோஷம்) சீர்திருத்தத்திற்கு மதமும் கடவுளும் எப்பொழுதாவது முட்டுக்கட்டையாக நின்றால் அவைகளை அழிக்கவே முயல்வோம். எனவே மதம் நிலைக்க வேண்டுமென்ற ஆசை எந்த மத பக்தர்கட்காவது இருந்தால் அவர்கள் மதத்தைச் சீர்திருத்தியமைத்து ஜாதி, தீண்டாமை முதலியவற்றை ஒழிக்க உடனே முற்பட வேண்டும்.

ஜாதி இருக்கும் வரை சுயராஜ்ஜியமில்லை.

ஜாதி மனிதனின் சுயமரியாதைக்கு விரோதமானது என்றும் அதனை அவசியம் துரத்தவேண்டுமென்றும் நான் கூறினேன். நாமெல்லோரும் ஜனநாயக ஆட்சியை வேண்டி நிற்கின்றோம், இன்னும் இரண்டு மூன்று வருஷத்திற்குள் ஜனநாயக ஆட்சி வரப்போகின்றது. அதற்கு ஜாதி வித்தியாசம் முற்றிலும் முரணானதாகும். சமத்துவத்தை விரும்புகின்ற நாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கும் போது பலர் கூக்குரலிடுகின்றனர். அதற்கு நாம் பதில் கூற முற்பட்டால் மேனாட்டு வழக்க ஒழுக்கங்களைக் காட்டுகின்றார்கள். மேல் நாடுகளில் கீழ் மேல் ஜாதி இருக்கிறதா என்று கேட்டால் தலை குனிந்து முணுமுணுக்கின்றார்கள். ஜாதி இருக்கும் வரையிலும் ஜனநாயக ஆட்சி வெறும் பகற்கனவேயாகும். எனவே சுயமரியாதைக்காரர்கள் ஜாதியொழித்தலை விட்டுவிட்டாலுங்கூட தேசியவாதிகள் கட்டாயமாக ஜாதியை யொழிக்கப்பாடுபட வேண்டியதாகும். நமக்குள் வித்தியாசத்தை வைத்துக்கொண்டு சுயராஜ்ஜியத்தை வேண்டினால் என்ன பொருளிருக்கின்றது? ஜாதி இருக்கும் வரையிலும் சண்டையும் போரும் சச்சரவும் கலகமும் இருந்துதான் தீரும்.

பெண்கள் நிலை.

இந்து மதத்தில் பெண்களின் நிலை மிகப் பரிதாபமானதாகும். அவர்களுக்குச் சமூகத்தால் விதிக்கப்படுகின்ற பல குறைபாடுகள் ஒரு பாலிருக்க, பிதா சம்பாதித்த சொத்திற்குப் பாத்தியதை இல்லையென்பது மிக மிக வருந்தத்தக்கதாகும். இப்படி வற்புறுத்தி சொல்லுகின்றவர்கள் மதவாதிகளேயாவார்கள். இரண்டு, மூன்று வருடங்கட்கு முன்பு சகோதரனுடைய சொத்து சகோதரிக்குச் செல்லும் பாத்தியமுமிருக்க வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. இன்றைய நடைமுறையில் ஒருவன் வாரிசுகளில்லாமலிறந்து போனால் அவனுடைய உற்ற பந்துவாக ஒரு சகோதரி இருந்தாலும் அவளுக்குச் சொத்துரிமை போகாது; எங்கேயோ விருக்கின்ற ஒரு புருஷ சந்ததியையே சென்றடைகின்றது. இதனை சீர்திருத்த வேண்டுமென்று மேற்படி மசோதா கொண்டுவரப்பட்டது. அதனைக் கொண்டுவந்தவர் சர் ஹரிசிங் கவுர் ஆவர். நான் அதனை ஆமோதித்தேன். அப்போது ஒரு வைதீகர் எழுந்திருந்து பலமாக எதிர்த்துப் போராடினார். அவர் அப்போது கூறிய காரணங்கள் மிக்க விந்தையானவைகளாகும். பிண்டத்துக்குரியவனே வாரிசாக இருக்க வேண்டுமென்பது இந்து சட்டமென்றும், பெண்ணுக்கு சொத்திறங்கினால் பிண்டம் கொடுக்க முடியாதென்றும், எனவே மதம் கெட்டுவிடுமென்றும் சொன்னார். தான் பெற்ற பெண்ணுக்கு சொத்தில்லாமல் எவனோ ஒருவனுக்கு பிண்டம் போடுவதாகச் சொத்துக்களை கொடுத்து விடவேண்டுமாம். நாம்தேடிய சொத்துக்கு இருக்கும் பாத்தியதையைப் பாருங்கள். இவ்வாறு மதம் பிண்டத்தோடு முடிவதாயிருந்தால் மதமவசியமாவென்று கேட்கிறேன். (கரகோஷம்)

சுயராஜ்ஜியத்தில் வைதீகம் காக்கப்படுவது.

இத்தகைய எண்ணங்களையொழிக்கவேண்டும் என்பதுதான் நமது கொள்கை. ஆனால் வைதீகர்கள் வரப்போகிற சுயராஜ்ஜியத்திலும் தங்களைக் காத்துக் கொள்வதற்காக முயற்சிக்கின்றார்கள். சமீபத்தில் மகாத்மா போட்ட 20 திட்டங்களில் ஒன்று வைதீக மதத்தைக் காப்பாற்றுவதற்கே அமைத்ததாகும். அஃதாவது ஏதேனும் ஒரு மதசம்பந்தமான சீர்திருத்த தீர்மானத்தை அம்மதக்காரர்கள் 100-க்கு 70-பேர்கள் சேர்ந்து மதத்திற்கு முரணானது என்று ஆட்சேபித்துவிட்டால் அத்தீர்மானம் வாபஸ் வாங்கிவிடப்பட வேண்டுமென்பதாகும். இந்த கருத்திற்கு மதநடுநிலையென்பது பெயர். நாமின்று மதநடுநிலைமையைத்தான் அழிக்க வேண்டுமென்கிறோம். மதநடுநிலைமையிருக்கின்ற ஒரு சுயராஜ்ஜியம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, இரண்டும் ஒன்றேயாகும். [கரகோஷம்] இந்த வைதீகர்களைப் போலவே மகமதியர்களும் தங்களுக்கான மத நடு நிலைமைக்குப் பாடுபடுவார்கள். வரப்போகிற லண்டன் மாநாட்டில் இந்த மத நடு நிலைமைதான் தலைவிரித்தாடும். நாமெல்லோரும் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நமக்கு எவருடைய மதத்தையும் அழிக்கவேண்டுமென்ற எண்ணமில்லை. ஆனால் எம்மதத்திலாவது கெடுதலான விஷயங்களிருந்தால் அது அழிந்துதானாகவேண்டும். ''சுயராஜ்யம்' வரும்போது நமக்குப்

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

சிறுகதை

முதற்பருவம்.

தீர்ப்பளியுங்கள்!

போட்டி

எண் 1.

'ஒன் ஜாதி என்ன, ஒன் குலமென்ன, நீ ஒன்னுடைய கொலத் தொழிலைச்செய்றது தாம்பாலல்லது!'

'போம்மா! நான் இழிந்த ஜாதியில் பிறந்தால் அதற்குன்னு ரிக்ஷாவை இழுக்கச் சொல்றியாம்மா! நான் எட்டாவது வரையில் படித்தேனே அது எதுக்கும்மா. நம்பளை எல்லாம் கோயிலுக்குள்ளே போகச் சொல்றாங்களே இதுக்குத்தானாம்மா''

'என்னமோப்பா நான் சொல்வேண்டியதைச் சொல்லிட்டேன். அப்புறம் உன் தலைவிதி ஹூம்!'

* *

ஆம்! மங்காயி, அக்ரகார ஆரியம் அறைவது போல் ஓர் இழிகுல மகள். சூத்திரச்சி!

அவளுடைய கணவன்—கண்ணன்—நாள் தோறும் ஓயாது மிருகத்திற்கும் மனிதனுக்கும் வித்தியாசம் இல்லா வகையில் ரிக்ஷாவை இழுத்து அதனால் வரும் கூலியைப் பெற்று வாழ்க்கையை நடத்துபவன்! வானமே கூரையாகவும், பூமியே படுக்கையாகவும் கொண்டு பாதையின் ஓரத்திலே வாழ்பவன்! ஒரு நாளைக்கு வண்டி இழுக்காவிட்டால் பணம் கொடுப்பார் எவருமில்லையே என்று ஏங்கும் அவன் மனம். கண்ணன் தன்னருமை மகன் பெரியசாமியை என்னமோ எல்லோரும் படிக்கப் பள்ளிக்குச் செல்கின்றார்களே, தன் மகனும் பணமில்லாது சிறிது அந்தப்படிப்பைத்தான் படிக்கட்டுமேஎன்றெண்ணி 'பரமானந்தசாமி இலவசப் பள்ளி'க்கு அனுப்பி வைத்தான்.

பெரியசாமி எட்டாவது வகுப்பை எட்டிப்பிடிக்கும் தருவாயில் இருந்தான். இடையே எண்ணிறந்த இன்னல்களை அடையவேண்டியிருந்தான் பெரியசாமி.

"டேய்! பாடம் எழுதிக் கொண்டு வந்தாயாடா?'' என்பார் ஆசிரியர் அனந்தய்யர்.

"இல்லை சார்! நேற்று எங்கம்மாவிற்கு ஜுரம் சார்''என்பான்பெரியசாமி.

"உன்னைச் சொல்லி என்னடா பிரயோஜனம், நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டிலே வைச்சாப்பிலே தான் உட்காருடா பறப்பயலே!'' என்பார் எழுத்தறிவிக்கும் ஏந்தல்!

இதைப் போன்று பல நிலைமைகளில் திண்டாடித் திகைத்திருக்கின்றான் பெரியசாமி.

இப்பொழுது கண்ணன் மிகவும் மெலிந்து காணப்பட்டான். உழன்று உழன்று உழைத்து உருமாறியிருந்தான் கண்ணன். கடும் வெய்யில், பெரு மழை என்று எதையும் பார்க்காது பரந்த ஊர் முழுதும் சுற்றிச் சுற்றி ஒரு நாளைக்கு 8 அல்லது 10 அணாக்கள் சம்பாதிப்பான். அவனுடைய தொழிலைச் சிறிது சிரமமில்லாமல் செய்துவர, கள்ளானால் ஒருதடவையும் டீயானால் பலதடவையும்அருந்த வேண்டி வருகின்றது. அதற்கே அய்ந்தணா செலவாகி விடுகின்றது. மிகுதியான சில அணாக்களை வைத்துக்கொண்டு அம்மூவரும் எங்ஙனம் காலத்தைத் தள்ளுவர்? வாழ்க்கையே அவர்களுக்கு ஓர் பெரிய பாரமாகத் தோன்றிற்று என்றால் அதில் வியப்பேதுமில்லை. கண்ணனுடைய தலை பலைவனமாகவும் அதில் எங்கோ ஒரிரண்டு புற்கள் முளைத்திருப்பது போலவும் இருந்தன. அவனுடைய கண்களில் ஓர் சமுத்திர நீரும் கொள்ளும் போலிருந்தது. அவனுடைய தோல், எலும்புகளை எடுத்துக் காட்டும் பூதக் கண்ணாடி போலவும் காணப்பட்டது!

அன்று கண்ணன், கண்ணபிரானை கருத்திலே எண்ணிக்கொண்டே, ரிக்ஷாவை எடுத்தான். இரவு நல்லமழை பெய்து விட்டிருந்தது. தனவந்தர் தனபால் முதலியார் டேய்! என்று கூப்பிட்டார் தன்காரில் 'பெட்ரோல்' இல்லாத காரணத்தால்! அலறிக் கட்டிக்கொண்டு, அவரைத் தன்னுடைய ரிக்ஷாவிலே ஏற்றிக்கொண்டு, பாரம் தாங்க முடியாமல் வண்டியை இழுத்தான். கால் இடறியது, விழுந்தான். கணுக்கால் முறிந்தது. ஆம்! கண்ணனின் கால்தான் முறிந்தது! தனவந்தரின் கால் அல்ல! தனவந்தர் காலாயிருப்பின் அந்த ரிக்ஷா இழுக்கும் வம்சம் என்னபாடுபட்டிருக்குமோ!

இந்நிலையிலே கண்ணன் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டான். தன்னருமைத் தந்தைக்கு "டாக்டர்"களிடம் கெஞ்சிக்கூத்தாடி அங்கு இடம் தேடிக் கொடுக்கவும், மற்றும் பிற வசதிகள் செய்து கொடுக்கவும் ஒருவாரம் பிடித்தது பெரியசாமிக்கு. பள்ளிக்கு ஒரு வாரமாகச் செல்லவில்லை. அதைப்பற்றி அறிவிக்கவுமில்லை.

ஒருவாரம் சென்று பள்ளிக்குச் சென்றவன் முகவாட்டத்துடன் வீடு-இல்லை-கூரையில்லாக் குடிசைக்குத் திரும்பினான். தாய் என்ன? என்றாள். தலைமைஆசிரியர், தனக்கும் தன்ஜாதிக்கும் படிப்பு என்றால் தூரமாம் என்று சீட்டுக் கிழித்துவிட்டார் என்றான்.

தகப்பன் ஆஸ்பத்திரியில். தாயும் தனயனும் நடுத்தெருவில். இந்நிலையில் தாய் தன் தனயனை ஏதாவது

கல்வி நீரோடையிலே அறிவு எனும் நீரைப்பருகலாம் என்று சென்றால் ஆரியம் என்னும் முதலை தன்னைத் தீண்டவருகின்றது. உத்யோகம் எனும் உத்யானவனத்திலே உலவிச் சிறிது இன்பத்தைப் பருகலாம் என்றாலோ அங்கே பார்ப்பனீயம் எனும் பாம்பு தன்னைத் தீண்டவருகின்றது.

ஓர் வேலைக்குச் செல்லத் தூண்டுகின்றாள். எனவே பெரியசாமியும் வேலைக்காக 'பரோபகாரி பவுண்டரி'யின் மனேஜர் பராங்குசமய்யரைப் பார்க்கச் சென்றான். மானேஜர் பெரியசாமியுடன் பேசுகிறார். இதோ கேளுங்கள்!

'வாப்பா! என்னாவேணும்உனக்கு?'

'ஏதாவது ஒரு வேலை கொடுத்தா நல்லா இருக்குங்க'

'ஒன்னுமில்லியேப்பா. சரி எவ்வளவு படிச்சிருக்கே'

'எட்டாவதுங்கோ!

'பரவாயில்லை-Certificate காட்டு பாப்போம்.

'இல்லீங்க! நான் போனவாரம் பள்ளிக்கூடம் போகலீங்க. அதனாலே எனக்குப்படிப்பு வராதாம். அவரு டிஸ்மிஸ் பண்ணிட்டாருங்க.

'ஓஹோ' அப்படீன்னா எனக்கும் நீ வானாம்பா.

* *

எனவே இரண்டாவதிலும் தோல்வி கண்டான் பெரியசாமி. திரும்பிவந்த பெரியசாமிக்கும் அவன் தாய் மங்காயிக்கும் நடந்த உரையாடலைத்தான் முதன் முதல் குறிப்பிட்டிருக்கின்றோம். அப்போதுதான் பெரியசாமிக்கு புரிந்தது. என்ன என்று கேட்கின்றீர்களா?

கல்வி நீரோடையிலே அறிவு எனும் நீரைப்பருகலாம் என்று சென்றால் ஆரியம் என்னும் முதலை தன்னைத் தீண்டவருகின்றது. உத்தியோகம் எனும் உத்யானவனத்திலே உலவிச் சிறிது இன்பத்தைப் பருகலாம் என்றாலோ அங்கே பார்ப்பனீயம் எனும் பாம்பு தன்னைத் தீண்டவருகின்றது.

எனவே வேறுவழியின்றி வேதனையின் மேலிட்டால் வஞ்சகத்தின் வினையினால், தானும் ரிக்ஷாவை மேற்கொண்டான், கல்வி கற்றும் பயன் பெறமுடியாத பெரியசாமி. பகுத்தறியும் பண்பு பெற்ற பெருமக்களே! நீங்களே கூறுங்கள். பெரியசாமி ரிக்ஷா இழுக்கும் தொழிலை மேற்கொண்டது அவனுடைய குற்றமா?

குடி அரசு

12—6—48 சனிக்கிழமை.

பெரியார்.

ஏர்க்காட்டில் தங்கியிருந்த பெரியாரவர்கள் கழிந்த ஒரு வாரமாக ஈரோட்டில் தங்கி ஓய்வுபெற்று, பெரிதும் உடல் நலம் பெற்ற நிலையில் 10-உ பளைய கோட்டைக்குச் சென்று 11உ பெங்களூர் சென்றிருக்கிறார்கள். அங்கிருந்தபடி இன்று (12உ) சென்னை செல்லலாம்.

பண்டித நேரும் திராவிட நாடும்.

★

இந்திய யூனியன் முதல் மந்திரி என்று அழைக்கப்படுகின்றவரும், "குடி அரசு" இந்தியாவின் தலைவர் என்று கருதிக் கொண்டிருக்கிறவருமான பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள், ராஜமரியாதையுடன் திராவிட நாட்டுக்கு வந்து, நீலகிரி மலையில் அய்க்கிய நாடுகள் ஆசியப் பொருளாதாரக் கமிஷனின் மாநாட்டைத் திறந்து வைத்ததோடு, கோவையில் ஒரு பொதுக் கூட்டச் சொற்பொழிவும் நடத்தி விட்டுச் சென்று விட்டார்.

இந்த மாநாட்டிற்கு உலகப் பிரதிநிதிகள் பலர் வந்திருப்பதும், ஆடம்பரமாக மாநாடு நடந்து கொண்டிருப்பதும், ஏராளமான பணச் செலவில் விருந்து, கேளிக்கை முதலியவைகள் நடந்ததும், பத்திரிகைகளில் வெகுவிமரிசையாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தமாநாட்டினால் விளையும் பயன் என்ன என்பதைச் செல்வவான்களுக்கே விட்டுவிடுகிறோம். ஏனெனில் நீலகிரி மலைப் பிரதேசம் முழுவதுமே தங்கமாகவும், வெள்ளியாகவும் ஆகிவிட்டாலும் இந்நாட்டிலுள்ள ஏழைப் பாட்டாளி மக்களான 100க்கு 90 பேருக்கு, குறைந்த அளவு வயிற்றுக்கும், குறைந்த அளவு வாழ்வுக்கும் எவ்வளவு தேவையிருக்கும் என்று கணக்குப் போட்டுத்தான் செல்வவான்களால் கொடுக்கப்படுமே தவிர, மற்றபடி அவர்களுக்குஅந்த செல்வப் பெருக்கில் எவ்விதப் பங்குமே இருக்கப்போவதில்லை. ஆதலால்ஆசியாதேசம்செல்வம்பெருகி 'குபேரப்பட்டணம்' ஆவதாலோ, இந்திய யூனியனில் செல்வம் பொங்கி வழிந்து வெள்ளம்போல் ஓடுவதாலோ ஏழை மக்களுக்கு ஆவதொன்றில்லை. ஆகவே அதை ஒதுக்கி வைத்துவிட்டுப் பண்டிதர் பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சைப் பற்றிச் சற்று விவரிப்போம்.

பண்டிதர் கோவைக்கு வந்து மில் முதலாளிகளுடைய விருந்தாளியாயிருந்து, அவர்களுடையகள்ளமார்க்கட் கொள்ளையில் பத்து லட்ச ரூபாய், காந்தி நிதிக்காக என்று பங்கு பெற்று வாழ்த்துக் கூறிவிட்டு, பொதுக்கூட்டத்தில் பொது விஷயமாகப் பேசுகையில் 3,4 விஷயங்களைப் பற்றி முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவற்றுள்.

1. சென்னை மாகாணத்தில் இருந்து வரும் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்னை ஒரு சில்லரை விஷயம்.

2. மாகாண உணர்ச்சி ஒழிந்து ஒரே நாடு என்ற அய்க்கிய உணர்ச்சி ஏற்படவேண்டும்.

3. உற்பத்திப் பெருக்கு தடைப்பட்டால் கவர்மெண்டு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது.

4. மதமற்ற ராஜ்ஜியம் நிறுவுதல் என்கிற விஷயங்களை இங்கு நாம் எடுத்துக் கொள்ளுவோம்.

பார்ப்பனர்—அல்லாதார் பிரச்னையைப் பண்டிதர் சின்ன விஷயம் என்கிறார். அது அவர் மனதில் பட்ட உண்மையாகவுமிருக்கலாம். ஏனெனில் அவரும் ஒரு பார்ப்பனர் தானே. கடவுளைக் காணக் கஞ்சா அடித்துக் கொண்டு, ஜடாமகுட தாரியாய் விளங்கி ஜனங்களின்முன் "நீயும் பொய், நீபெற்ற குழந்தையும் பொய், நீ இருக்கும் வீடும் நீ தேடிய செல்வமும் பொய், உண்ணும் உணவும் பொய், மறு உலகைப் பார்! ஞானக்கண்ணால் நோக்கு!" என்று பேசும் வறட்டு வேதாந்திகளும் இந்த நாட்டில் மதிக்கப்படுகிறார்கள், போற்றப் படுகிறார்கள். அந்த வேதாந்திகள் உண்மையாகவே மனதில் அப்படிக்கருதவில்லை என்று யார் சொல்ல முடியும்? அதுபோலவே ஆட்சிப் பீடத்தில் ஏறிக்கொண்டு, உலக விவகாரங்களில் எப்பொழுதும் முழுக் கவனத்தையும் செலுத்திக்கொண்டு, உலகத்தில் இந்தியா ஒரு வல்லரசாக விளங்கவேண்டுமென்ற நோக்கத்தையே கனவு கண்டு கொண்டிருக்கும் பண்டிதர்—திராவிடநாட்டில் ஒரு அல்லாதாராய்ப் பிறவாமல், ஒரு "தாசிமகனாய்" "சூத்திரனாய்" இல்லாத பண்டிதர்—வடநாட்டில் பார்ப்பானாகவே பிறந்து வாழ்ந்து வருகிற பண்டிதர்—இதைச் சில்லரை விஷயமென்று உண்மையாகவே கருதா விட்டாலும் கருதுவதாகச் சொல்லித்தான் ஆகவேண்டும். அப்படிக்கில்லாமல் உண்மையாய்க் கருதுகிறார் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் இந்தச் சில்லரை விஷயத்திற்கு என்ன மாற்றுக் கண்டுபிடித்தார்? இந்தப் பேதம் ஒழிவதற்கு என்ன வழி என்று கூறினார்? இந்தப் பிரச்னை எப்பொழுது வந்தது, ஏன் இருந்து கொண்டிருக்கிறது, இந்தப் பரந்த துணைக் கண்டத்தில் எங்கெங்கு இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் அவர் கூறினாரா என்று பார்த்தால் அவர் அதைப்பற்றியெல்லாம் ஒன்றும் கூறவில்லை. வாழ்க்கை இன்பத்தைச் "சிற்றின்பம்" என்று கருதி அலட்சியமாகப் பேசும் "அறிவு முதிர்ச்சி" யுடையவர்களைப் போல, பண்டிதரவர்கள் வாழ்க்கை இன்பத்திற்குத் தடைகல்லாக இருக்கும் இந்தப் பிரச்னையைச் சில்லரை விஷயம் என்று கூறும் பொழுது அதைப் பற்றியெல்லாம் கூறுவார் என்றுதான் எப்படி எதிர்பார்க்க முடியும்?

ஹைதராபாத், பூனா, பாம்பே போன்ற இடங்களில் எல்லாம், இந்தப் 'பூதேவர்கள்' ஜாலவித்தைகளினால் மக்கள் வாழ்வு நசுக்கப் பட, அதனால் ஏற்படும் தகராறுகளையெல்லாம் இந்த நாட்டுப் பனியா அரசாங்கமும், பார்ப்பனப் பத்திரிகைகளும் வேண்டுமென்று கட்டுப்பாடாக மறைத்து வந்தாலும்கூட, இந்த நாட்டில் நேரடியாகப் பார்ப்பனீயத்தின் பிடியில் சிக்கி அவஸ்தைப் பட்டு. அல்லலுக்குள்ளாகி வரும் பெருங்குடி மக்கள் இதை எப்பு

ரோஜா முத்தையா

டிச் சில்லரை விஷயமாகக் கருத முடியும் என்று கேட்கிறோம்.

இந்தச் சில்லரை விஷயம் தீருவதற்கு ஒரு சின்ன வழியைக் கண்டு கூறத்தெரியாதவர் பண்டிதர் என்று நாம் நினைக்க வில்லை. ஆனால் சில்லரை விஷயம் தீர்ந்து விட வேண்டுமென்ற எண்ணம், நோக்கம் அவருக்கு இல்லை என்பதை நாம் நிச்சயமாகக் கூறுவோம். மேலும் பண்டிதர் கண்ணுக்குச் சின்ன விஷயமாக, சில்லரைத் தகராறாகக் காணப்படும் இந்தப் பிரச்னை, திராவிடனுக்குஉயிர்போன்ற பிரச்னை, சொல்லப் போனால் உயிரைக் காட்டிலும் மேலான மானத்தைப் பாதிக்கும் பிரச்னை என்றும் நாம் அவருக்குக் கூறுகிறோம். இந்தப் பிரச்னை தீராமல், தேவலோகத்து ரம்பையையும், ஊர்வசியையும், காமதேனுவையும் சொல்லிச் சொல்லி இந்த உலகவாழ்வைப் பற்றி எண்ணும் எண்ணத்தை அடைத்து அடக்கி விட்டது போல, எவ்வளவு ரம்மியமான கனவுகளைப் பற்றி வருணித்தாலும் திராவிடர்கள் இனி ஏமாறுவதற்குத் தயாரில்லை யென்பதையும், இந்தப் பிரச்னை தீருவதற்கு இன்று அறிவையும், விளக்கத்தையும் நம்பிக்கொண்டிருப்பவர்களைப் பண்டிதருடைய பேச்சுக்களின் விளைவு, கூடியவிரைவில் பாக்கிஸ்தான் பிரச்னையைவிட அய்தராபாத் பிரச்னையைவிடப் பெரிய பிரச்னை என்று கருதும் படிச் செய்யத்தக்க, ஆற்றலையும் அதன் பல வேறுவகையான பிரயோகங்களையும் கைக்கொள்ளும் படியாகவே திராவிட மக்களைச் செய்யும் என்பதையும் நாம் அவருக்கு வற்புறுத்தி எடுத்துக் கூறுகிறோம்.

100 க்கு 97 பேர்களை நாலாஞ் சாதியாக, அய்ந்தாம் சாதியாக ஆக்கி 100 க்கு 3 பேரான பார்ப்பனர்கள் முதல் சாதியாக இருந்து கொண்டு, உத்தியோகம், தொழில் முதலிய எந்தத் துறையிலுமே மற்றவர்களை முன்னேற விடாமல், கலையின் பேராலும், கல்லின் பேராலும், சாஸ்திரத்தின் பேராலும், சடங்கின் பேராலும் மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சிக் கொண்டு, இப்படிநாங்கள் உறிஞ்சி உறிஞ்சி உடம்பைக் கொழுக்க வைத்து வருவது தான் கடவுள் கட்டளையென்றும், இதைமாற்ற நினைப்பது ஆணைப்பெண்ணாக்க நினைப்பது போல வென்றும் விதண்டாவாதம் பேசிக்கொண்டும் வருகிற நிலைமையில் 97 பேருக்கு இழிவையும், தாழ்வையும், பழியையும் கொடுக்கும் படியான பிரச்னையைச் சில்லரை விஷயம் என்றும், அற்ப விஷயமென்றும் பேசுவது என்றால் இதை அறியாமை என்று சொல்லுவதா? ஆணவம் என்று சொல்லுவதா? என்று கேட்கிறோம்.

சாதிபேதத்திற்கிடமான சாஸ்திரங்களை அழிப்பேன்! இழிசாதியாக்கும் எந்தக் கடவுளுக்கும் இனி இந்த நாட்டில் இடமில்லை! சாதிக்கொரு நீதிகூறும் சட்டம்

ஏன் அ. நி. சபையைக் கலைக்க வேண்டும்?

பெரியார் கூறிய காரணங்கள்.

1. அரசியல் பிரதிநிதித்துவ சபை இந்திய யூனியன் மக்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல.

2. இப்போதிருக்கும் சட்டசபை மெம்பர்கள் தேர்தல் நடக்கும்போது, இந்த நாட்டில் இருந்த ஆட்சி பிரிட்டிஷ் ஆட்சியாகும்.

3. பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சிமீது இருந்த அதிருப்தி காரணமாகவும் சரியான பிரதிநிதித்துவம் இல்லாத காரணமாகவும் சில கட்சிகளும், சில பொதுநலச் சீர்திருத்தக்காரர்களும், சில தனிப்பட்ட நபர்களும் தேர்தலுக்கு நிற்கவில்லை. இந்தத் தேர்தலுக்கு முன்பே தெரிவித்து இருக்கிறார்கள்.

4. பிரிட்டிஷ் ஆட்சியார் தங்களுக்கு வசதியான ஆட்சி நடைபெற வேண்டும் என்பதற்கு ஆக இந்த நாட்டில் பார்ப்பனர்களுக்கும் படித்தவர்களுக்கும் மாத்திரம் ஓட்டு உரிமை இருக்கும்படி வசதி செய்து கொண்டு 100க்கு 12 பேர்களுக்கே ஓட்டு உரிமை கொடுத்து விட்டு மற்ற மக்களுக்கு ஓட்டுரிமைப் பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்திருந்த முறையில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்தான் இப்போதைய சட்டசபை மெம்பர்களாவார்கள்.

5. தவிர இந்த மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படும்போது குடியேற்றநாட்டந்தஸ்துப் பேச்சும், இந்தியா ஒரே யூனியனாக இருக்கவேண்டும் என்கின்ற பேச்சும் இருந்ததில்லை.

6. பெரிதும் கிரிப்சு திட்டம்தான் அதுவும் பேச்சு வார்த்தையில்தான் இருந்தது.

7. இன்றைய இந்திய யூனியனில் நடந்துவரும் சுதேச சமஸ்தானக் கொள்கை உள்நாட்டுக் கலவரம் ஏற்பட்டதற்குக் காரணமாக இந்திய யூனியன் அரசாங்கத்தார் நடந்துவரும் கொள்கை முதலியவைகள் தேர்தல் காலத்தில் பிரச்னையாக இல்லை.

8. தேர்தல் காலத்தில் இருந்து வந்த, காங்கரஸ் அங்கத்தினர்களைச் சேர்க்கும் இரசீதுகளிலும், அக்காலக் காங்கரஸ் கொள்கைகள் திட்டங்களிலும் இருந்து வந்த வாக்குறுதி அளித்த காரியங்கள், கருத்துக்களுக்கு விரோதமாகவே அ. நி. சபை காரியங்கள் நடக்கின்றன.

9. வகுப்பு மதம் விஷயங்களில் காங்கரஸ் வாக்குறுதிகளை அரசியல் நிர்ணயசபை சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை.

10. காங்கரஸ் பாதுகாப்பு அளிப்பதாகவும், மாற்றி அமைப்பதாகவும் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றப்படவில்லை.

குறிப்பு:—பெரியாரவர்கள் அரசியல் நிர்ணயசபை ஏற்படுவதற்கு முன்னாலிருந்தே அந்த அமைப்பைக் கண்டித்து, இதுவரை பல இடங்களிலும் பேசிய கருத்துக்களை இங்கு நாம் திரட்டித் தந்திருக்கிறோம். அ. நி. சபையின் அமைப்புச் சரியில்லை என்றும், அதை உடனே கலைத்துவிடவேண்டும் என்றும் பேசிய ஜவஹரின் பார்ப்பன நண்பர் ஜெய்ப்பிரகாஷ் அவர்களின் கருத்தையும் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தோம். இனிமேல் யார் சொன்னால் இந்த அ. நி. சபையை ஜவஹர் அவர்கள் கலைப்பார்கள் என்பதைப் பொதுமக்கள் எண்ணத்திற்கே விட்டு விடுகிறோம்.

[ஆ—ர்]

களை மாற்றியமைப்பேன்! எல்லோருக்கும் சம சந்தர்ப்பம், இதுவே என் ஆட்சியின் லட்சியம்! என்று கூறியிருப்பாரேயானால், உடனே காரியாம்சத்தில் செய்து மனிதன் மனிதனாக வாழுவதற்கு வகை செய்வாரேயானால், இந்தப் பிரச்னையைச் சில்லரை விஷயம், அற்பவிஷயம் என்று சொல்லுவதில் ஒரு வகையில் அர்த்தமுண்டு. அப்படிச்செய்வதற்குஆண்மையும் நியாயவுணர்ச்சியுமில்லை என்று காட்டிக் கொண்டு, ஒரு சிறு கும்பலின் அளவு கடந்த சுயநலப்போக்கை பெரிதாக மதித்துக் கொண்டு, இந்தப்பிரச்னையைஅற்ப விஷயம் என்று கூறத் துணிந்தார் என்றால் இதிலென்ன அர்த்தமிருக்கிறது? என்று நாம் கேட்கவில்லை. காந்தியார் உயிரைக் காவு கொண்டாலும், கணக்கற்ற கேடுகளைப் பரம்பரையாகச் செய்து கொண்டு வந்தாலும், பார்ப்பனீயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று துடிதுடிக்கும் ஒரு பச்சைப் பார்ப்பனரிடம் இதை நாம் எதிர்பார்ப்போமானால் அது நம்முடைய அறிவின் பலவீனத்தையல்லவா காட்டும்; எப்படியோ அவருடைய கைக்கு ஆட்சியின் பொறுப்பு போய்ச் சேருவதற்கு உதவியாக ஒத்துழைத்த திராவிடர்கள், அதனால் ஏற்படும் பலாபலன்களை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்? என்றுதான் நாம் கேட்கிறோம்.

மாகாண உணர்ச்சியைத் தவறு என்றும், அதை ஒழிப்பதற்காகவே போராடுவேன் என்றும் பண்டிதர் இரண்டாவதாகக் குறிப்பிடுகிறார். பண்டிதருடைய நிலைமைக்கு நாம் இரங்குகிறோம். மாகாண உணர்ச்சியை ஒழிக்கும் போராட்டத்திலீடுபடுவாரானால் இப்போராட்டமே அவர் வாழ் நாள் முழுதுக்கும் சரியாய் இருக்குமென்றும், அப்படியும் அதில் வெற்றிபெற முடியாதென்றும், தன்னுடைய நிழலைத் தன்னை விட்டுப் பிரித்துவிட எண்ணி முயற்சிக்கிறவன் அடையும் பயனைத்தான் "சமதர்மச் சிங்கம்'' ஜவஹரும் அடைய முடியும் என்றும் உறுதியாய்க் கூறுகிறோம்.

உலகத்தில், ஒரே மொழி பேசுகிற மக்கள் வெவ்வேறு நாட்டினராக வாழ்வதைப் பார்க்கிறோம். ஒரே மதத்தைக்கொண்டு ஒழுகும் மக்கள் வெவ்வேறு நாட்டினராக வாழ்வதைப் பார்க்கிறோம். நடையுடை பாவனை, நாகரீகம், கலாச்சாரம் முதலியவைகளில் ஒற்றுமையுடைய மக்கட்கூட்டம்கூட வெவ்வேறு நாட்டினராக வாழ்வதைத் தான் பார்க்கின்றோம். இந்தியாக் கண்டத்தைப் போலவே மக்கள் எண்ணிக்கை உள்ள அய்ரோப்பாக் கண்டம் 30 நாடுகளாக விளங்குவதேன்? என்று பண்டிதரைக் கேட்கிறோம்.

மேலும், முஸ்லிம்களுடைய கோரிக்கையை அலட்சியப்படுத்தி அவதூறாகப் பேசிவந்ததின் விளைவு அல்லவா, பல லட்சக் கணக்கில் மக்கள் படுகொலைக்குள்ளாகி, பல கோடிக்கணக்கில் பொருள் நஷ்டமாகிய பின் பிரிவினை ஏற்பட்டுப், பிரிவினையைத் தடுத்ததின் பின் விளைவாக அந்த நிலைமையேடீடித்து, 2வருஷஆட்சி 20 வருஷ சிறைவாசமாக இருக்கிறது என்று கூறச் செய்து, பண்டிதர் உள்பட பல தலைகள் எப்பொழுதும் பாதுகாப்பிலேயே வாழ்ந்து ஆகவேண்டும் என்ற நிலைமையை உண்டாக்கியிருக்கிறது? அதைப் பண்டிதர் ஏன் மறந்தாரோ?

இன்று ஹைதராபாத் பிரிவினையை எவ்வளவு தான் பலி கொடுத்துப் பார்த்தாலும் நிறுத்த முடியாது என்கிற உண்மையைத் தானே, நாளைக்குப் பண்டிதர் ஒரு பாடமாகப் படித்துக் கொள்ளப்போகிறார் என்றும் கேட்கிறோம்.

ஆகவே, மாகாண உணர்ச்சியை ஒழித்து விடலாம் என்று எண்ணுகிறகனவு வீண்கனவு என்றுகூட நாம் எண்ண வில்லை. அது ஆபத்தானகனவு. இந்தஆபத்தானகனவு நிறைவேறாது என்பதை நேருகூட்டம் பல ஆபத்துக்களாகித்தான் உணர்ந்து கொள்வோம் என்றால் யார் என்ன செய்ய முடியும்? ஆட்சி மமதையின் உச்சாணிக் கிளையில் நின்று, ஆரம்பிக்கும் இந்தப் பல்லவி, வீழ்ச்சிக்கும் பல்லவியேயாகும் என்பதை உலக வரலாறு உணர்த்துகிறது. அப்படியிருக்க மதம், மொழி, உணவு, உடை, பழக்கம், வழக்கம், நாகரீகம், கலை முதலிய எல்லாவற்றாலும் வேறுபட்ட பல் வேறு நாட்டுமக்களை, இன்று பல மாகாணத்தவர் என்று பிரித்துப் பேசும் நிலையில் உள்ளவர்களை, "ஒரே நாட்டுணர்ச்சி கொள்ளச் செய்வேன், இன்றேல் ஒரேயடியாகப் போராடுவேன்'' என்று பண்டிதர் கூறுவாரானால் இந்தப் பல்லவி உண்மையாகவே எதற்குப் பல்லவியாக இருக்க முடியும்? "இன்னும் பல பேரைச்சாகச்செய்வேன், பல கோடிப்பொருளைப் பாழ்படுத்துவேன், வடநாட்டில் நாங்கள் காணும் நரகத்தைத் திராவிட நாட்டிலும் சிருஷ்டிக்கத் தூண்டுவேன்'' என்பது தவிர வேறு என்ன பயன் இந்தப் பேச்சால் விளைந்துவிட முடியும்?

மூன்றாவது தொழிலாளி பிரச்னை. உற்பத்திப் பெருக்கத் தடைப்பட்டால், கவன்மெண்டு சும்மா இருக்காது என்கிறார் பண்டிதர். வேறு என்ன செய்யும்? ஆலைகளைச் சர்க்கார் ஏற்று நடத்துமா? அல்லவே அல்ல! அந்த எண்ணம் கொஞ்சமாவது இருந்திருந்தால்,ஆலையரசர்களின் விருந்தாளியாய், அவர்களடித்த கொள்ளையில் பங்காளியாய் ஜவஹர் இருந்திருக்க முடியுமா? வேறு என்னதான் கவர்ன்மெண்டு செய்யும்? இதுவரை என்னதான் செய்து வந்திருக்கிறது?

துப்பாக்கிக்குப் பலரைப் பலியாக்கியிருக்கிறது. அடித்து உதைத்து மிரட்டிப் பலவந்தமாகப் பலரை வாட்டி வதை செய்திருக்கிறது. பல குடும்பங்களைப் பட்டினி போட்டுப் பதறும்படி செய்திருக்கிறது. மாயவரத்தில் தொழிலாளியைச்சுட மலையாளத்திலிருந்து மிலிட்டிரி. ஆலப்புழையில் தொழிலாளியைச்சுடஆந்திராவிலிருந்து மிலிட்டிரி. இதுதானே தொழிலாளிபெற்றுவருகிற வெகுமதி. இந்த வெகுமதிதானே கொள்ளைக்கார வெள்ளையன் ஆட்சியிலிருந்து தொழிலாளிக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது? காங்கரஸ் ஆட்சி இரண்டாவது முறையாக நடைபெறத் தொடங்கியதிலிருந்து இந்த நாட்டில் நடந்து வந்திருக்கும் தொழிலாளர்கள் கிளர்ச்சி எவ்வளவு? மக்களாட்சி அதுவும் பாட்டாளி மக்களாட்சி என்று பேசிக்கொண்டுவரும் இந்த ஆட்சியில் ஏன் இத்தனை வேலை நிறுத்தங்கள்? இந்த வேலை நிறுத்தங்களை நிறுத்த மிலிட்டிரியைக் கொண்டு வந்து சுடச்செய்தான் வெள்ளைக்காரன் என்றால், இப்போதையக் கருணைக் கடல் காங்கரஸ் கவர்ன்மெண்டு, போலீஸார் கையிலேயே துப்பாக்கியைக் கொடுத்து கேள்வி கேட்பாரற்ற நிலையில் கண்ட கண்ட இடத்தில் சுடச்செய்திருக்கிறது. போதாததற்கு எல்லா உத்யோகஸ்தர்களையுமே மிலிட்டி

ரியாக ஆக்குவேன் என்று சொல்லி அதற்கான காரியங்களைச் செய்கிறது.

இதுதான் அதாவது முதலாளிக் குப்பாதுகாப்பாய் இருந்து தொழிலாளியை ஒடுக்கி வருவது தான், பாட்டாளி மக்கள் சுயராஜ்ஜியம் என்று பேசப்படும் காங்கரஸ் சர்க்காரின் போக்காயிருந்து வருகிறதே தவிர, 100 க்கு 90 பேர் தொழிலாளிகளாயிருக்கும் இந்தநாட்டில், தொழிலாளிகளின் வாழ்வுக்கு, முன்னேற்றத்திற்கு வேறு என்ன திட்டம் தான் இந்த சர்க்கார் வைத்திருக்கிறது? முதலாளி முதலாளியாகவே இருந்து வரவேண்டும்; அவன்நிலை பாதுகாக்கப்படவேண்டும். அதே நேரத்தில் தொழிலாளி தொழிலாளியாகவே இருந்து வரவேண்டும்; அவன்நிலையும் பாதுகாக்கப்படவேண்டும் என்கிற கொள்கை தவிர வேறுஎன்ன திட்டம் தான் காங்கரஸ் ஸ்தாபனத்திற்கே இருக்கிறது என்று சொல்லிவிடமுடியும்?

பதினாயிரக் கணக்கில் தொழிலாளிகள் வேலையில்லாமல் அந்தக் கோவையிலேயே பரிதவிக்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டுமென்று கோரி அங்கேயே பலபேர் பட்டினி கிடக்கிறார்கள் (இதனால் பட்டினியை ஆதரிப்பது நம்முடைய நோக்கமல்ல) இதைக் கண்ணால் கண்ட நேரு அவர்கள், முதலாளிகளிடத்தில் பத்துலட்சரூபாயைப் பெற்றுக் கொண்டு, "உற்பத்திப் பெருக்குத் தடைப்பட்டால் கவர்மெண்டு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது'' என்று மிரட்டுவாரேயானால் இந்த மிரட்டுக்கு என்ன அர்த்தம்? என்று கேட்கிறோம். மேலும் கவர்ன்மெண்டு நடத்தும் ரயில்வே தொழிலாளிகளை ஈவு இரக்கமற்ற முறையில் நடத்திக் காட்டிய சர்க்கார், "பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது'' என்றால் இதற்கு அர்த்தம் என்ன? இன்னும் சொல்லப் போனால் பத்து லட்ச ரூபாயை வாங்கிக் கொண்டுபோய் போன இரண்டொரு நாட்களிலே, ஜவுளி விலைவாசி முதலாளிகளின் கொள்ளை லாபப் போக்கினால் உயர்ந்திருக்கும் நிலையில், அதற்கு உடனடியாக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல், கண்ரோல்களை எடுத்துவிட்டோம் என்று உத்திரவு போடுவாரானால், "கவர்மெண்டு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது'' என்பதற்குக் கிரமமாக என்ன அர்த்தம் கொடுக்க முடியும் என்று கேட்கிறோம்.

முதலாளிகளே! நீங்கள் கொள்ளையடியுங்கள்! எங்களுக்குக் கவலையில்லை! எப்படியாவது உற்பத்தி பெருக வேண்டுமென்பது தான் எங்கள் நோக்கம்! அதற்குத் தொழிலாளிகள் சத்தம் போடாமல், வேலை நிறுத்தம் செய்து வேலை தடைப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்! ஏ தொழிலாளிகளே! உங்கள் வயிற்றுக்கு எவ்வளவு குறைவாகத் தேவையோ அந்தத் தேவையைப் பெற்றுக் கொண்டு, "போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து'' என்ற மனத் திருப்தியோடு தகராறில்லாமல் வேலை செய்கிறீர்களா? இல்லை, நாங்களே மேல் பார்த்து நடத்தி, இன்னும் உங்களை அதிகமான அவஸ்தைக்கு ஆளாக்க வேண்டுமா?

இதுதானே ஜவஹருடைய பேச்சம், நடத்தையும் வெளிப்படுத்தும் உண்மை. இந்தப் போக்கு எவ்வளவு நாளைக்கு நீடிக்க முடியும்?

நாலாவதாக மதமற்ற ராஜ்ஜியம் நிறுவுதலே என் லட்சியம் என்கிறார் பண்டிதர். அவருடைய உண்மையான நடத்தையையும் நாணயத்தையும், சாதாரண மக்களுக்கும்கூட தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுவது போன்றது இந்தச் சங்கதி.

இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், பார்ஸிகள் முதலான பல மதஸ்தர்கள் வாழுகிற இந்த நாட்டிற்கு வெள்ளைக்காரன் குடியேற்ற நாட்டந்தஸ்து கொடுக்கிறேன் என்று சொல்லி, அதைப் பூரண சுயராஜ்ஜியம் என்ற மறு பெயரோடு ஆகஸ்ட்டு 15 ல் நேரு அவர்கள் பிரதம மந்திரியாக ஆட்சிப் பீடத்தில் ஏறினாரே எப்படி? மதமற்ற ராஜ்ஜியம் நிறுவும் இந்த லட்சியவாதி இந்துமதச் சம்பிரதாயத்தின்படி, சாஸ்திரம் பார்த்து நல்ல நாளும் நல்ல வேளையும் பார்த்து அர்த்தராத்திரியிலல்லவா, அதுவும் வேத விற்பனர்கள் வேதபாராயணம் செய்ய அல்லவா, இந்த மதமற்ற ராஜ்ஜியத்திற்கு அங்குரார்ப்பணம் செய்தார்?

ஜனவரி 30 ல் சண்டாளப் பார்ப்பனக்கோட்சே, சாந்தம் தவழும் காந்தியாரைச் சுட்டுக் கொல்ல, அவர் உடம்பைத் தீக்கிரையாக்கி அந்தச் சாம்பலை ஊருக்கு ஊர் அனுப்பியதும், அங்கங்கேயுள்ள நதிகளில் கரைத்ததும் இந்துமத சாஸ்திர முறைப்படி நடந்ததா? மதமற்ற நிலையில் நடந்ததா? காந்தியார் ஈமக்கிரியையைப் பண்டிதரின் தனிப்பட்ட விஷயமென்றோ தேவதாஸ் முதலியவர்களின் சொந்த விஷயமென்றோ சொல்லிவிட முடியாத நிலையில் அல்லவா அரசாங்கமே அந்தக் காரியத்திலீடுபட்டுச் செய்தது? இதுதான் ஒரு மதமற்ற ராஜ்ஜியத்தின் நாணயமான நடத்தையா?

சுதந்தர நாட்டில் சுதந்தரக் கப்பலைச் சுதந்தரமாகச் செலுத்துகிறோம் என்று சொல்லி, ஒரு முதலாளி கம்பெனியின் ஜல—உஷாவை வெள்ளோட்டம் விட்ட ஜவஹர் அவர்கள், வேதபாராயணம் முழங்க ஜவஹர்லால் சாஸ்திரியாகக் காட்சியளித்தாரே தவிர மதமற்ற ராஜ்ஜிய லட்சியவாதியாகவா நடந்து கொண்டார்?

இன்னும் ஜவஹர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, கவர்ன்மெண்டின் சார்பாக வைக்கப்படும் பெயர்கள் எல்லாம், இந்துமதத்திற்கே சொந்தமானதாக, இந்து மதத் தத்துவங்களுக்கு விளக்கமானதாக இருப்பதுதான், மதமற்ற ராஜ்ஜியத்திற்கு மறுக்க முடியாத சாட்சியா?

மதமற்ற ராஜ்ஜியமே தன்னுடைய லட்சியம் என்ற நேரு அவர்

தாலுக்கா திராவிடர் கழக மாநாடு. செங்கம்

★

வடார்க்காடு மாவட்டம் செங்கம் தாலுக்கா திராவிடர் கழக மாநாடு 20—6—48ம் நாள் நடைபெறும். பெரியாரவர்கள் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புக் கழகத்தார்.

கள், அப்படிச் சொல்லியதிலிருந்து ஒரு வடிகட்டின வக்கீலையும், ஒரு அசல் வியாபாரியையும், ஒரு சுத்தமான தாசியையும் மிஞ்சிவிட்டார் என்றுதானே சொல்ல முடியும் என்று கேட்கிறோம். வக்கீல், வியாபாரி, தாசி ஆகிய மூவருடைய நடத்தைகளையும் பித்தலாட்டமான நடத்தையென்றால், அந்த மூன்றும் சேர்ந்தால்கூட ஜவஹருடைய இந்த நடத்தைக்கு உரை போட காணாது என்றுதானே முடிவு கட்டவேண்டியதாயிருக்கும்?

ஆகவே ஜவஹர் அவர்களுடைய பேச்சு இந்த நாட்டு மக்களின் சஞ்சலத்தைப் போக்காது. நோய் எதுவோ அந்த நோய்க்கேற்ற பரிகாரமாகாது. பொறுப்பற்றது, நேர்மையற்றது, தெளிவில்லாதது, பித்தலாட்டமானது என்கிற முடிவைத்தான் இப்பேச்சைக் கேட்ட பிறகு, படித்த பிறகு எவருக்கும் கொடுக்கும் என்று சொல்லும்படியாயிருந்தாலும், ஜவஹர்லால் அவர்களுடைய விஜயம் திராவிட நாட்டிற்கு ஒரு ராஜ விஜயமாக, உல்லாசப் பிரயாணமாக, ஆடம்பர அலங்காரக் கேளிக்கையாக இருந்தது என்று சொல்லும்படியாய் இருக்கிறது என்பதையும் நாம் மறுக்கவில்லை.

★

திருமண அழைப்பு.

அன்புடையீர்!

நாளது 17—6—48 வியாழக்கிழமை காலை 10-மணிக்கு திருவாரூர் எங்கள் இல்லத்தில் இசைமணி T. V. நமசிவாயத்திற்கும் G. குசலாம்பாளுக்கும் திரு. C. N. அண்ணாதுரை M. A. அவர்கள் முன்னிலையில் பதிவுத் திருமணம் நடைபெறும். அன்பர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வந்திருந்து மணமக்களை வாழ்த்த வேண்டுகிறோம்.

அன்புள்ள,
T. N. ராமன்
T. N. லேக்ஷப்பா.

★

மறைவு.

தில்லைத் தமிழ்ப் புலவர் தோமூர் த. முருகேசன் அவர்களின் தங்கை தோழியர் சாந்தா அவர்கள் பிள்ளைப் பேற்றின் காரணமாக 3-6-48ம் நாள் இயற்கையெய்தினார்கள்.

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பல சீர்திருத்தமானதும் சமத்துவமானதுமானதுமான மசோதாக்கள் கொண்டுவரவேண்டியிருக்கும். நானிப்போது சட்ட சபையில் இரண்டு மசோதாக்களைக் கொண்டு வந்திருக்கின்றேன். ஒன்று சட்டப்படி ஜாதிபேதமிருக்கக்கூடாதென்பது. இன்னொன்று பொட்டுக்கட்டும் வழக்கம் ஒழிய வேண்டுமென்பது. இத்தகைய மசோதாக்கள் மகாத்மா கூறுகின்ற சுயராஜியத்தில் வந்தால் ஒரு சிலரால் எடுத்து எறிந்துவிடப்படும். நமது நாட்டில் 10 வருஷங்களில் வரவேண்டிய சீர்திருத்தங்கள் பிரிட்டிஷார் வந்து 150 வருஷங்களாகியும் இன்னும் நமது நாட்டில் ஏற்படவில்லை. அதற்கு ஆங்கிலேயரின் மத நடு நிலைமையன்றி வேறு காரணமென்ன? விக்டோரியா மகாராணியின்—மதத்தில் தலையிடமாட்டோ மென்கின்ற விளம்பரமே நமது முன்னேற்றத்திற்குச் சாவுமணியாயிருந்து வருகின்றது. மதநடு நிலைமை வகிக்கின்ற அரசாங்கமும் சுயராஜியமும் ஒழிந்தாலல்லது நமக்கு உண்மை விடுதலை வரப்போவதில்லை. (கரகோஷம்) இந்த முட்டுக்கட்டையொழியாத சுயராஜியம் நமக்கு வேண்டவே வேண்டாம். அது நமக்கு மிகவும்ஆபத்தானதாகும். சுயராஜியத்திற்கு முன் நாம் நமது சுயமரியாதையையும், சக்தியையும் பெருக்கிக்கொள்ளவேண்டும்.

★

அசையும்பற்களை அசையாமல்நிறுத்த

வெற்றி குரு பல்பொடி.

விலை ஒருஅணா

★

சிரங்கு, ரணம், சிரங்குகளுக்கு

அய்ப்பால்.

விலை 5 அணா.

ஏஜன்ட்தேவை. மாதம் ரூ. 50 சம்பளம். நிபந்தனை, மாதிரிக்கு ரூ. 1. M. O. வேண்டும்.

ஸ்ரீ அய்யப்பன் பார்மஸி
48 சாமிசன்னதி திருநெல்வேலி.

காந்தியடிகளின் ஞாபகார்த்தம்.

"காந்தி"

மாதம் இருமுறை 1—15 தேதி
ஆசிரியர்: காந்தி வைத்தியர்
Dr. வெற்றி M. B. H. அவர்கள்
கதை, விகடம், பொன்மொழி, படத்துடன். 1 அணா. வருடம் ரு. 2. ஏஜண்டுகள் டிபாசிட் ரூ 10 அனுப்புக. நிபந்தனைக்கும் மாதிரிக்கும் 2 அணா.

"காந்தி"
48. சாமி சன்னதி திருநெல்வேலி.

எவ்வளவு பெரிய புளுகு பாருங்கள்!

★

எர்ணாகுளம் ஜூன் 7.

கடந்த புதன்கிழமையன்று மட்டாஞ்சேரிக்கு ஒரு அதிசய மனிதன் வந்து சேர்ந்தான். ஒரு லங்கோட்டையும் பூணூலும்தான் இவன் அணிந்து கொண்டிருக்கிறான். இவனைப் பார்த்தால் 30 வயதுக்கு மேல் தோன்றவில்லை. ஆனால் தனக்கு 685 வயதாய் விட்டதென்கிறான். இந்த அதிசய மனிதனை போலீஸார் கைது செய்து சென்ற சனிக்கிழமையிலிருந்து ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்டதிலிருந்து இவன் உணவு அருந்தவுமில்லை, தண்ணீரும் குடிக்கவில்லை. காலைக் கடன்களை முடிக்கவும் எழுந்து செல்லவில்லை. ஆனால் ஆளைப் பார்த்தால் தெம்புள்ளவனாகவும், எதனாலும் பாதிக்கப்படாதது போலவும் காணப்படுகிறான்.

இவன் யார் எங்கிருந்து வந்தான் என்று போலீஸ் கேட்டதற்கு கி. பி. 1263 ம்வருஷம் (மலையாளம் ஆண்டு 438) அகவூர் மானா என்ற மிகவும் உயர்ந்த நம்பூதிரி குடும்பத்தில்தான் பிறந்ததாக அவன் கூறினான்.

11 வருஷங்கள் சேர்ந்தாற்போல தான் கடலுக்குள்ளேயே இருந்து சிறு மீன்களையும் கடற்பாசிகளையும் தின்று வாழ்ந்து வந்ததாகவும் இந்த 11 வருஷங்கள் வரையில் தான் கரைக்கே வரவில்லை என்றும் அவன் கூறினான்.

400 வருஷங்களுக்கு மேல் இமய மலையில் தொடர்ந்தாற்போல இருந்தானாம் அதற்குப்பிறகு சில சில சமயங்களில் தான் இமய மலைக்குச் சென்றானாம்.

இந்த விசித்திர மனிதன் சொல்வதெல்லாம் ஒரே அதிசயமாக இருக்கிறது தன் பெயர் பிரபாகரன் என்று சொல்கிறான். இவனுக்கு சித்தப்பிரமை ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை.

இந்த அதிசய மனிதன் கூறும் தகவல்களை மற்ற இடங்களில் விசாரித்து இது உண்மைதானா என்று கண்டுபிடிக்க போலீஸ் உத்தேசித் திருக்கிறார்களாம்!

(4ம் பக்கத் தொடர்ச்சி)

உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்,
உடம்பினில் உத்தமன் கோயில் கொண்டா னென்று,
உடம்பினையானிருந்தோம்புகின்றேனே,''
''உடம்பாரழியில் உயிராரழிவர்,
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்,''

என்ற மூலரின் மூதுரைகட்கும், சிறுத்தொண்டன் செயலுக்கும் எவ்வளவு முரண்பாடு? உத்தமன் கோயில் கொண்டுள்ள உடலை வெட்டிக் கறி சமைக்கும் செயல் உலுத்தனின் செயலா, உலகெலாம் உணர்ந்தோதற்கரியவனை உணரவிரும்பிய உத்தமனின் செயலா? கடவுள்வாழுமிக்காயத்தைக் கண்டதுண்டமாக்கியது கயவனின் செயலா, கச்சாக நாகமசைத்தோனைக்காண இச்சை படைத்த கருணை யோனின் செயலா? பாலகன் பரிதவிக்கப்படு கொலைபுரிந்தது பரிவிலாதோனின் செயலா, பாரண்ட மொன்றாய்ப் பரந்தபரம் பொருளைப்பார்க்க விழையும் பக்தனின் செயலா?

தன்மகனின் உயிரை வாங்கினான் சிறுத்தொண்டன். (அப்புறம் பிழைத்துவந்தான் என்ற பொய்யொரு பக்க மிருக்கட்டும். ஏனெனில் முதலில் தன் மகனைத்துண்டிக்கும் பொழுது தன்மகன் உயிர்த்தெழுவான் என்றெண்ணவில்லை அவன்) அதனால் உலக மக்களுக்குண்டான இன்பம் யாது? உமக்கும் எனக்கும் அதனால் விளைந்த நன்மை என்ன? நரபலிகளின் எண்ணிக்கை வேண்டுமானால் அதிகமாகியிருக்கலாம். லெவிஸியரோ தன்னுயிரைக் கொடுத்து மஞ்சள் காய்ச்சலின் காரணத்தை உலகிற்குணர்த்தினான். அதனால் மக்களினம் நேற்று வாழ்ந்தது; இன்று வாழ்கிறது; நாளையும் வாழும் நன்றாக. ஆகவேதான் லெவிஸியரை உத்தமன் என்றோம்; சிறுத்தொண்டனைப் பெருங்கொலைஞன் என்றோம்.

நிற்க, கல்லாயிருந்த காளத்தியப்பருக்குக் கண்ணினின்றும் வந்ததாம் குருதி. முதலில் இடது கண்ணில் வந்ததாம். தனது இடது கண்ணைப் பிடுங்கிவைத்தானாம் கண்ணப்பன். ஒழுகிய குருதி நின்றுவிட்டதாம். முதலிலெடுக்கும் போதே பித்தலாட்டம். கல்லினின்றும் இரத்தம் வருவதே, கருத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் ஒவ்வாததொரு நிகழ்ச்சி. அப்படித்தானிருந்தாலும் இறைவனாக இருந்த கல்லினின்றா?

சிந்தித்திருக்க வேண்டாமா கண்ணப்பன்? 'என்னடா கல்லார்க்கும் கற்றவர்க்கும் மற்றெல்லார்க்கும் அனைத்துயிர்க்கும் கண்ணளித்தவனின் கண்ணினின்றா இரத்தம் வரும்' என்று, அப்படித்தான் வந்தாலும் அதை ஒரு சாதாரணமனிதனுடைய கண்ணால் சரிப்படுத்தமுடியுமா? கடவுளாலேயே தன்கண்ணைச் சரிப்படுத்திக் கொள்ள முடியவில்லை யென்றால் மனிதனால் என்ன செய்ய முடியும்! அனைத்துலகிலும் நடப்பன, நடக்கப்போவனவற்றை யெல்லாம் அறியுமாற்றலுடைய கண்ணுக்கே ஆபத்து வந்தால், சுவருக்கு அப்பால் இருப்பனவற்றையே பார்க்கவியலாத மனிதனின் கண்கள் அதனை எப்படிச் சரிபடுத்த முடியும்?

எல்லாவற்றையும்விடப் பெரிய புரட்டு என்னவென்றால் கண்ணப்பன் தனது இடது கண்ணை இடந்தப்பியதும் இலிங்கத்தின் கண்ணினின்றொழுகிய இரத்தம் நின்று விட்டதாம். கண்ணப்பன் தன்கண்ணைப் பிடுங்கினதும் அதிலிருந்தொழுகியிருக்குமே இரத்தம், அது எங்கு போயிருக்கும். ஒருவேளை கண்ணப்பனின் கண் பீங்கான் கண்ணா? அப்படியிருந்தால்கூட பீங்கான் நீருறிஞ்சும் காகிதம் (Blotting paper) அல்லவே, இலிங்கத்தின் கண்ணினின்றொழுகிய குருதியையுறிஞ்ச. மேலும், கண்ணிடந்தப்பினானே கண்ணப்பன், அவன் இறைவனின் கண்ணைத்தோண்டியெடுத்துவிட்டு அந்த இடத்திலே தன்கண்ணைவைத்தப்பினானா? இறைவனின் கண்மேலேயே தன் கண்ணையும் வைத்தப்பினானா?

இடது கண்ணப்பியதும் இறைவனது வலது கண்ணில் வந்ததாம் குருதி. அதற்குத் தனது கால் விரலைக் கடவுளின் வலது கண்மீது அடையாளத்திற்காக வைத்துத் தனது வலது கண்ணையும் பிடுங்குவதற்குப் போனானாம். அப்பொழுது தான் ஈசன் ''நில்லு கண்ணப்பா, நில்லு'' என்றானாம். இடது கண்ணுக்கு இடது கண்ணைக் கொடுத்தாகிவிட்டது. வலது கண்ணுக்கும் தன் வலது கண்ணைக் கொடுக்கப்போனான். அப்பொழுது ஈசனுக்கு மூன்று கண்கள் உள்ளன என்பதை மறந்து விட்டான் போலும் கண்ணப்பன்.

''இரண்டு கண்களும் சரியாகி மூன்றாவது கண்ணிலும் இரத்தம் வந்தால் என்ன செய்வது'' என்று சிறிதாகிலும் நினைத்துப் பார்த்தானா அவன்?

''கல்லா நெஞ்சில் நில்லானீசன்'' என்ற தொடருக்கும், மூளைக்கு வேலையே கொடாத கண்ணப்பன் கடவுளால் ஆட்கொள்ளப்பட்டதற்கும் எவ்வளவு முரண்பாடு?

மரண தண்டனை பெற்ற ஒருவன் தனது கண்ணைப் பிறருக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும், அவ்வாறே பழுதிலாதிருந்த அவனது கருவிழிகளின் மேற்றோலை (Cornea) எடுத்து, கருவிழி கெட்டதால் பார்வையிழந்த பாதிரி ஒருவனது கண்களில் அவற்றைப் பொருத்த (Corneal Grafting) அப்பாதிரியின் கண்கள் இழந்த பார்வையை மீண்டும் பெற்றன என்ற செய்தி ஓராண்டுக்கு முன் நாளிதழ்களில் வெளிவந்தது எல்லோருக்கும் நினைவிருக்கும். மரண தண்டனையடைந்த ஒரு குற்றவாளியின்கண்களாலாவது ஒரு பாதிரி பார்க்கும் சக்தியைப் பெற்றான். கண்ணப்பனின் கண் கல்லைக் கறைப்படுத்தியதேயன்றி மக்களுக்கு என்ன நன்மையைப் பயந்தது?

கண்ணப்பன், சிறுத்தொண்டன் இவர் போன்றோர் தம் வரலாறுகள் தமிழ் மக்களை 'வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லேன், நாளாநிற் கண்ணிடந்தப்ப வல்லேன் அல்லன்' என்றுபாடி, மடமையை வளர்த்து, தீவினையைப் புரிந்து, இன்னலைப் பெருக்கி மக்களினத்தின் இன்பத்திற்குழைப்பதற்காகத்தான் நாம் வாழுகிறோம்'' என்ற சீரிய கொள்கையை மறந்து வாழுமாறு செய்திருக்கின்றன; அறிவின்வளர்ச்சியையும் தடைப்படுத்தின. தடைப்படுத்தினதோடல்லாமல் குன்றவும் செய்தன. ஆதலினாலே தான் அவனியிலேயே முதன்முதலில் அரைக்கு ஆடையணிந்த தமிழன், நிலம் உழுது பயிரிட்ட தமிழன், இலவந்திகை போன்ற இயந்திர வாவிகள் உண்டாக்கின தமிழன், 'வளியிடைப்பரவா வானஞ்சூடிய வையம்' என்பது போன்ற விஞ்ஞான உண்மைகளை உணர்ந்திருந்ததமிழன், நிலத்துக்கு நிலம் மாறுபட்ட யாழ்களுண்டாக்கி அவற்றினின்றும் இன்னிசை யெழுப்பி மதயானையையும் மயக்கிய தமிழன், ஆறலைகள்வர் படைவிட, அருளின் யாழில் பாலைப் பண்ணெழுப்பி, அவர்களைச் செயலற்றவராக்கி இசையால் வெற்றிகொண்ட தமிழன், கடாரம் வென்ற தமிழன், கங்கை நாட்டரசராம் கனக விசயரைக் கல்சுமக்கச் செய்த தமிழன், வடாஅது பனிமலையில் விடாது முக்கொடி பறக்கச் செய்த தமிழன், கிரீஸ் போன்ற நாடுகளில் அடிமை யென்றும் ஆண்டை யென்றும் இரு பிரிவாய், மேல் கீழாய் மக்களிருந்த நேரத்திலே, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சமரஸகீதம் இசைத்த தமிழன்; கனைகடலினூடேகலம் பல செலுத்தி யவனரோடும், ரோமரோடும் வாணிபஞ் செய்த தமிழன் கால்வயிற்றுக் கஞ்சியிலாது கருகுகிறான்; வேலையிலாது வேகிறான்; படிப்பிலாது பரிதவிக்கிறான்; பார்ப்பனீயத்தால் பழிக்கப்படுகிறான்; வடநாட்டு வாணிபத்தால் வதைக்கப்படுகிறான்; நாகரீகமில்லாத இனங்களுள் ஒன்றைச் சேர்ந்தவனாகக் கருதப்படுகிறான்.

இனியேனும் பகுத்தறிவை மழுக்கி, இன்னலைப் பெருக்கிய அறிவிலாச் சோம்பேறிகளாகிய சிறுத்தொண்டர்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

குற்றஞ்சாட்டி அடித்துத் துன்புறுத்தவும், வேலாயுதம் போன்ற இயக்கத் தோழர்களைக் கொலை செய்யவும் தமிழர்களில் சில குண்டர்களுக்குப் பணத்தையும் பொருளையும் வைத்தியநாத அய்யர்கள் கொடுப்பார்கள்.

இப்போது தமிழ் நாட்டில், ஏறக்குறைய எல்லா உத்தியோகங்களையும் பார்ப்பனீயம் பிடித்துக் கொண்டிருக்கிறது. போலீஸ் இலாகா முதல் எல்லா இலாகாவிலும் எங்கும் பார்ப்பனமயமாகத் தான் இருக்கிறது. இந்த உத்தியோகத் தோரணையில் அதிகாரம் காட்டி பணக்காரர்களையும் மற்றவர்களையும் பார்ப்பனீயம் வசப்படுத்துகிறது. பத்திரிகைகளும் பார்ப்பனீயத்தின் பிடியில் தானே இருக்கின்றன! இந்தத் துறையிலும் பார்ப்பனீயம் பணக்காரர்களையும் பட்டத்தில் உள்ளவர்களையும் மிரட்டிக்கொண்டு தன் வசப்படுத்துகிறது.

உத்தியோகங்களையும், பத்திரிகைகளையும், உபாத்திமைத் தொழிலையும் மட்டுந்தான் பார்ப்பனீயம் கைப்பற்றிக் கொண்டது என்று நினைக்காதீர்கள். வியாபாரம், தொழிற்சாலை முதலிய பொருளாதாரத் துறைகளையும் கைப்பற்றிக் கொண்டு வருகிறது. ஓட்டல்கள் எல்லாம் தமிழ் நாட்டிலே யாருடைய ஏகபோக உரிமை என்று நினைக்கிறீர்கள்? எல்லாம் பார்ப்பன மயம் ஜகத். திராவிடத் தோழரே! தமிழ் நாட்டை நீர் என்னென்னவோ செய்யப்போகிறதாகச் சொல்லுகிறீரே! இந்த நிலையில் நீர் என்ன செய்யப்போகிறீர்?

சுருக்கமாக முடிக்கிறேன். பார்ப்பனர் பொருளாதாரம், அதிகாரம் (பதவி) என்னும் முக்கிய உயிர் நாடிகளைத் தங்கள் வசம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். போர் செய்து அல்ல. புல்லேந்திய கையில் வாளேந்திக் கைப்பற்றவில்லை. பார்ப்பனீயத்திற்கு இயற்கையாகவுள்ள தந்திரபுத்தி, அடுத்துக்கெடுக்குந்தன்மை, நயவஞ்சகம், கடின நெஞ்சம், சுயநலப் பேய்த்தன்மை, பின்னின்று தாக்குதல் முதலிய இழி குணங்களைக் கொண்டு. இவைகளைக் கைப்பற்றிக்கொண்டதோடு, தமிழர்களாகவுள்ள பணக்காரர்களையும், அதிகாரப்பதவியில் உள்ள சில தமிழர்களையும் தன் கையாளாகச்செய்து கொண்டது. அதுவும் நேர்மையான முறையில் இல்லாமல் அவரவர்கள் மனப்போக்குப் போல் நடந்து கொண்டும், சிலரை மருட்டியும், சிலரை அதிகார பலத்தைக் காட்டியும் வசப்படுத்திக் கொண்டிருக்கிறது. லக்ஷக்கணக்கில் வருவாயுள்ள மடாதிபதியொருவர், அடையாற்றில் உள்ள ஒரு அம்மாமிக்கு ஆயிரக்கணக்கில் ரூபாய்களை அனுப்பித் தமிழ்த்தொண்டு செய்கிறார் என்றால், பார்ப்பனீயம் எங்கெங்கெல்லாம் எப்படி எப்படி செல்வாக்கு, உறவுகொண்டாடுகிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இப்போது ஒன்று ஞாபகம் வருகிறது. அதைச் சொல்லி இதை முடிக்கிறேன். இப்போது சினிமாப் படத்தொழில் செல்வாக்குப் பெற்று வருகிறது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், பெரும்பாலும் இளவயதுள்ளவர்கள், சினிமாப் படம் பிடிக்கும் தொழிலில் இறங்கிப் பெரும்பணத்தை முதலாகப்போட்டிருக்கிறார்கள். செட்டியார்களுக்கும் பார்ப்பனீயத்துக்கும்தான் அன்னியோன்னிய உறவாயிற்றே. இந்தத் தொழிலைப் பார்ப்பனர்கள் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாமிகளுக்கும் இத்தொழிலில் இறங்கவேண்டும் என்கிற ஆசையிருக்கிறதுபோலத் தெரிகிறது. எப்படி யென்றால் பரத நாட்டியத் தொழிலைப் பார்ப்பனீயம் இப்போது தன் சொந்தப் பிதிரார்ச்சிதச் சொத்தாக்கிக்கொள்ள முயற்சி செய்வதிலிருந்து அறியலாம். பேர் பெற்ற நட்டுவமார் இப்போது பார்ப்பனீய வலையில் சிக்கிக் கொண்டு பார்ப்பனப்பெண்களுக்குப் பரதநாட்டியம் கற்பித்து வருகிறார்கள். இதுவரையில் பரதநாட்டியம் தமிழர்கள் கையில் இருந்தது. எல்லாத் தொழிலையும் பார்ப்பனீயம் கைப்பற்றிக் கொண்டது போலவே, இந்தப்பரத நாட்டியத்தையும் இப்போது கைப்பற்றிக் கொண்டு வருகிறது; கைப்பற்றிக் கொண்டது. இன்னும் சில ஆண்டுகளில், பரதநாட்டியம் தெரியாத அம்மாமிகளே இருக்கமாட்டார்கள் போல் தோன்றுகிறது. அவ்வளவு அதிகமாகப் பரதநாட்டியம் இப்போது பார்ப்பனர்களால் கற்றுக்கொள்ளப்படுகிறது. காரணம் சினிமாக் கலை வளர்ச்சிதான். இப்பொழுதே அம்மாமிகள் பல துறையிலும் முன்னேறி விட்டார்கள். பரத நாட்டியம் கற்று நடனம் ஆடத்தெரிந்து கொண்டால் அது இன்னும் பல வழிகளில் முன்னேற உதவி செய்யும், பலருக்கு ஆட்டங் கொடுக்கும் அல்லவா? செட்டியார் பணம் பார்ப்பனர் கைக்குப் போகும் தந்திரம் தான் இது.

பார்ப்பனீயம் பொருளாதாரத்தையும், அதிகாரத்தையும் (உத்தியோகத்தின் மூலமாக) கைப்பற்றிக் கொண்டிருக்கிறது. இந்த முயற்சியில் பெரிதும் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறது. பணம் அதிகாரம் இரண்டையும் பெறுவதற்கு என்னென்ன சூழ்ச்சிகள் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் இடத்துக்குத் தக்கபடி செய்து வருகிறது. பணக்காரர்களும் அவர்களுக்கு அனுகூலமாகவே இருக்கிறார்கள். தமிழா! இது உன்னுடைய வீழ்ச்சி. அதிகாரத்தையும் பொருளையும் பார்ப்பனீயத்திடம் ஒப்படைத்து விட்டு நீ என்ன செய்யப்போகிறாய்? அடிமை வாழ்வா வாழப்போகிறாய்? இப்போது அன்னியன் நம்மை அடிமைப்படுத்தவில்லை. நமது உரிமையை, அதிகாரத்தை, செல்வத்தை நமது நாட்டிலேயே சில அயோக்கியர்கள் அயோக்கியத்தனமாக, சூழ்ச்சியாகத் திருடிக் கொள்கிறார்கள். ஜாக்கிரதையாக இருப்பது உன் கடமை.

கடைசியாக ஒரு எச்சரிக்கை. பார்ப்பனீயம் திராவிடக் கழகத்தாரைச் சு. ம. காரனை என்ன செய்யும் என்று நினைக்காதீர்கள். பார்ப்பனீய மாய்கை உங்களிடத்திலும் வலை வீசிக் கொண்டிருக்கிறது. பூணூலை அறுத்துவிட்டு திராவிடக் கழகத்தில் சேர்ந்தார் என்று பார்ப்பனத் தோழர்களைப்

கண்ணப்பன் முதலானோரைப் போற்றுதல் ஒழித்து, மக்களின் பெருந்துன்பங்களைத் துடைத்து இன்பத்தை மலரச் செய்த லெவியர், டாக்டர்குக், ரோனால்டுராஸ், யங்சிம்ஸன் போன்றோரைப் போற்றி அறிவுக்கு ஆக்கந் தேடுவோமாக. வாழ்கின்றனர் மக்களின்று லெவியர் போன்றோரால். தாழ்ந்தனர் தமிழர் கோட்புலி, சிறுத்தொண்டன், கண்ணப்பன் போன்றோரால்.

"வாலறிவன்"

பற்றி விடுதலைப் பத்திரிகையில் அடிக்கடி செய்தி வருகிறதே அதுவே போதும், பார்ப்பனீயம் உன்னைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்கிறது என்பதற்கு ஆதாரம். பார்ப்பனீயம் ஆசை காட்டிக் கெடுக்கும். அடுத்துக் கெடுக்கும். உறவாடிக் கெடுக்கும். பெண் ஆசைகாட்டி மயக்கும். இந்த மாயாஜாலங்களுக்கெல்லாம், திராவிடத் தோழரே! நீர் ஆளாகாமல் சமாளிக்க வேண்டுமே! பூணூலைக் கழற்றிக் கொடுத்து விட்டதாலேயே பார்ப்பன விஷம் போய் விட்டதாக நினைக்காதீர்! எச்சரிக்கை!

புல்லேந்தும் கையில் வாளேந்துவோம் என்றுபஞ்சாங்கக் கூட்டம் கொக்கரிக்கிறது. அதை நம்பாதே. பார்ப்பனீயம் வாளேந்தி, நேருக்கு நேராக, சுத்தவீரனைப் போல் முன்வருமானால் அதற்கு அஞ்ச வேண்டியதில்லை. இரண்டு கைகளை நீட்டி வரவேற்போம். அந்த வாள் அக்கிரகாரத்தில் துருப்பிடித்துப் போருக்குத் தகுதியற்றதாக இருந்தால் நம்மிடமுள்ள கூர்மழுங்காத புதிய வாளைக் கொடுத்துப்போர்களத்தில்இறங்குவோம். ஆனால், பார்ப்பனீயம் போர் செய்து வெற்றிபெற்றது என்பது இதுவரையில் சரித்திரத்தில் உண்டா? இல்லவே இல்லை. அடுத்துக் கெடுத்து வெற்றி பெற்றது. சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றது. கெஞ்சிக் கூத்தாடி வெற்றி பெற்றது. பிரிவினை உண்டாக்கி, கட்சிகளை ஏற்படுத்தி வெற்றி பெற்றது. சூதுவாது செய்து வெற்றி பெற்றது. பணக்காரனுக்கும், பதவியில் உள்ளவனுக்கும் அவனவன் மனம்போல (தகாத வழியிலும்) நடந்துதன் காரியத்தைச் சாதித்துக் கொண்டிருக்கிறது. நேருக்கு நேராக வாளெடுத்து எங்கே சண்டை போட்டது தம்பீ. வாளை எப்படிப் பிடிக்க வேண்டும், எங்கே பிடிக்க வேண்டும் என்று தெரியாதே. வாமனாவதாரமான பார்ப்பான் வஞ்சித்துத்தானே வென்றான்! பார்ப்பனக்கோட்சே,மகாத்மா காந்தியை வஞ்சனையாகத்தானே கொன்றான். போர்க்களத்தில் கொல்லவில்லையே. பார்ப்பனரின் வாளுக்கு அஞ்சுவதில்லை. சூழ்ச்சிக்கு அஞ்ச வேண்டும்.

"மலைப்பெருமாள்"

★ அய்யய்யோ ★

இது என்ன அவலக்ஷணமான தலைப்பு என்று நினைக்கிறீர்களா? ஆமாம் அப்படித்தான் நினைக்கத் தோன்றும். ஆனால்கட்டுரை முழுவதையும்படித்த பின்பு தலைப்பு சரிதானா என்று நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

ஆபத்து ஏற்பட்டாலன்றி "அய்யய்யோ" வார்த்தையை யாரும் கூற மாட்டார்கள். எதிர்பாராத சம்பவமோ, நாட்டிலே கொந்தளிப்போ, வாழ்க்கையிலே இடையூறோ ஏற்பட்டால், 'அய்யய்யோ' வெளிவரும். நவகாளி ஏற்பட்ட பொழுது பஞ்சாப் படுகொலையின் போது, காந்தியடிகளின் கோர மரணத்தின் போது 'அய்யய்யோ' தானாகவே வந்தது. தொழிலாளி முதலாளியால் ஏமாற்றப் பட்டபோதும், உழவன் உழைப்பின் பயனைக் காணாது வருந்தும்போதும் கற்பழிக்கப்பட்ட மங்கை கடைத் தெருவிலே கை விடப்பட்டபோதும், 'அய்யய்யோ' உள்ளத்துள்ளே குமுறும். ஆனால் தலைப்பின் 'அய்யய்யோ' விசித்திரமானது. பார்ப்பனர்கள் பதை பதைத்துக் கூறுவது தமிழ் மக்களைப் புண்படுத்தக்கூடியது. என்ன என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? மேற்கொண்டு படியுங்கள்.

தண்டமிழ் நாட்டுத் தாய் மொழி திருச்சி மாவட்டத்திலே மே 1-ந்தேதி முதல் அரசியல் மன்றங்களிலே ஆட்சி கொள்ளுவது குறித்து; அக்ரகாரக் கூட்டம் ஆர்ப்பரிக்கிறது. பார்ப்பனர்களைத் திட்டுவதற்குப் புது வழியா என்று பார்ப்பனர்களுக்காகப் பரிந்து பேசக்கூடிய நண்பர்கள் கேட்பார்கள். நாம் பார்ப்பனரைத் திட்டவேண்டுமென்ற எண்ணமுடன் இக்கட்டுரையைத் தீட்டவில்லை. திட்டுவதற்கு ஏற்றாற் போன்று நடந்து கொள்ளுகிறார்களே என்று நினைக்கும்போது தான் நாம் வருத்தம் கொள்ளாமலிருக்க முடியவில்லை. நாங்களும் தமிழர்கள் தான் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள், தமிழிலே அரசியல் அலுவல்கள் நடக்க வேண்டுமென்று கூறும்பொழுது அய்யய்யோ" என்று கூறுவதின் காரணம் என்ன? தமிழிலே அரசியல் அலுவல்கள் நடைபெற்றால் தங்களின் ஆதிக்கம் குறையுமே என்ற காரணத்தினாலா? அல்லது அரசியல் வேலைகளைத் தமிழ் மொழியில் கொண்டுவருவதற்கு வேண்டிய யோக்கியதை (மதிப்பு) தமிழுக்கு இல்லையென்ற காரணத்தினாலா? தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத அய்யர் என்று இக்கூட்டத்திற்கு கூவத்தெரிகிறது; தமிழ்க் கவிஞர்கள் எங்கள் இனத்திலேயும் உண்டு என்று சொல்லத் தெரிகிறது; தமிழ் நாட்டின் தவப்புதல்வன் வங்க கவர்னர் இராஜகோபாலாச்சாரியார் என்று பெருமைப்படப் பேசத் தெரிகிறது; தமிழர் தெலுங்கர் என்ற பிரச்னை எழும்போது, தமிழர் என்ற போர்வையிலே புகத்தெரிகிறது, ஆனால் தமிழ் மொழியிலே அரசியல் நடைபெற வேண்டுமென்றால் 'அய்யய்யோவா'? நாம் இதை இட்டுக்கட்டி கூறுவதல்ல. உண்மையை அறிய விரும்புவோர் திருச்சி நகருக்கு வந்தால் தெளிவு கொள்வர்.

தமிழுக்குப் பதிலாக, ஹிந்தி அரசியல் மன்றங்களிலே குடிபுக வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்திருந்தால் இக்கூட்டம் எவ்வளவுமகிழ்ச்சிகொண்டிருக்கும். "என்ன சார் எவ்வளவு நாளைக்கு ஆங்கிலத்திலேயே அரசாட்சி நடைபெறுவது. நமக்கென ஒரு மொழி வேண்டாமா? ஹிந்தி அவசியம் வேண்டும் சார்" என்று தாம் விரும்பிய மொழியை ஆதரிக்கக்கூடிய நிலையிலே அல்லவா ஒவ்வொரு பார்ப்பனனும் பேசுவான். ஹிந்தி வேண்டுமென்று கூறும் பார்ப்பனன் தமிழ் வேண்டாமென்று கூறுவதின் காரணம் என்ன? ஆங்கிலத்திலே அரசியல் நடைபெற்றாலும் பெறட்டும். ஆனால் தமிழ் மொழி மட்டும் வேண்டாம் என்று வெறுத்துப் பேசுவானேன்? ஆங்கிலம் வேண்டாம். ஆனால் ஹிந்தி வேண்டும் என்று அவன் கூறுவது, ஆங்கிலத்திலே அவன் கொண்டிருக்கிற வெறுப்பல்ல காரணம், ஆங்கிலத்தைவிட ஹிந்தியில் அரசியல் அலுவல்களில் அதிகமான பித்தலாட்டம் செய்ய முடியும் என்ற எண்ணத்தினால். ஹிந்தி ஆட்சிப்பீடம் ஏறின், தங்கள் இனம் இன்னும் ஒரு சில நூற்றாண்டுகள் உழைக்காமலே, உழைப்போரின் பயனை அடையலாம் என்ற நம்பிக்கையினால். தமிழ் நாட்டாருடனும், தமிழ் நாட்டிலும் ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக வசிக்கிறோம், எங்களுக்கும் தமிழ்மொழி தாய்மொழிதான் என்று நாட்டிலும், ஏட்டிலும் கூறி வருகிறார்கள். தமிழ் மொழியிலே, முதலில் திருச்சி மாவட்டத்தில், அரசியல் அலுவல்கள் நடைபெற வேண்டுமென்ற உத்திரவைக் கண்டவுடன் கலங்கி, கண்ணீர் சொரிந்து, 'அய்யய்யோ' என்று கூறுவானேன். பார்ப்பனர்களும் தமிழர்கள்தான் என்று வாதிடுபவர்கள் சற்று சிந்திக்க வேண்டுகிறோம். பார்ப்பனர்கள் தமிழர்கள் ஆனால், தமிழ் மொழியை வெறுப்பா

Fage numbering incorrect.

னேன்? அதனை 'அய்யய்யோ' மூலமாக வெளிப்படுத்துவானேன்? இதை நன்றாகச் சிந்திப்பவர்களுக்கு திராவிடம் ஆரியம் என்ற பிரச்சினை விளங்காமற் போகாது. ஆரியம் தமிழ் மொழியில் எவ்வளவு பற்றுக்கொண்டிருந்த போதிலும், அப்பற்று, இன, சுயநலங்கள் காரணமாக இருக்குமே தவிர்த்து, தமிழ் மொழி தழைத்தோங்க வேண்டுமென்ற முறையில் ஒரு துளியும் இராது என்றே அறுதியிட்டுக் கூறுவோம்.

இக்கூட்டத்தின் செய்கையைக் கண்டுகூட நாம் வருத்தப்படவில்லை. ஆனால் இக்கூட்டத்துக்கு அடிவருடிகளாக இருக்கிறார்களே, அந்த விபீஷணாழ்வார்களைக் கண்டுதான் நாம் வருத்தமும் வெட்கமும் கொள்ளுகிறோம். இவர்களுக்கும் தமிழ் வாராதாம். 'அய்யய்யோ' வோடு 'ஆமாம்' போடுகிறார்கள். அதனால் தான், ஆரியம் தைரியமாகக் கூறுகிறது 'அய்யய்யோ' வென்று.

தமிழிலே அரசாட்சி நடைபெறுவதா? அதை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா? என்று ஆரியம் எண்ணும். அவர்கள் எண்ணியதை 'கல்கி'போன்ற ஏடுகள் திருச்சியிலே அரசியல் அலுவல் தமிழிலே நடைபெற முடியவில்லையாம்'' என்ற தவறான கருத்தை நாட்டு மக்களிடத்தே எடுத்துக்கூறக் கூடும். அரசாங்கமும், தமிழ் மொழி வேண்டாம், ஆங்கிலத்திலேயே நடைபெறட்டும் என்ற மறு உத்திரவையும் பிறப்பிக்கக் கூடும். ஆனால் என்றைக்காவது ஒருநாள் தமிழ்மொழி திருச்சியில் மட்டுமல்ல, திராவிடம் முழுவதிலும் ஆட்சிப் பீடம் ஏறும் என்பதை, நாம் உறுதியாக நம்புகிறோம். அதனாற்றான் முன் எச்சரிக்கையாகக் கூறுகிறோம், இன்றைய அக்ரகாரத்தின் 'அய்யய்யோ' நாளை ஆபத்தானது என்று.

"போ. துரைசாமி."

★

வரப்பெற்றோம்.

வெடிகுண்டு.
(முதல்புத்தகம்)
விலை அணா 4.
ஆராய்ச்சிப் பதிப்பகம்.
121 கடைவீதி, பொள்ளாச்சி Po.

இனஉணர்ச்சிக் கவிதைகள்.
ஆக்கியோர் மணி-அரசு
விலை அணா 5.
வெளியிடுவோர்:—
P. R. குப்புசாமி, புதுப்பாளையம்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE

நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்! ஏன்?

● நமது உழைப்பை நம் நாட்டுப்பார்ப்பனர்கள் எப்படி வஞ்சிக்கிறார்கள்?

● நமது அறிவு எப்படிக் கொள்ளையடிக்கப்படுகிறது?

● நாம் ஏன் மானமற்றவர்களாக மடமையில் அழுந்திப், பார்ப்பானுக்குக் கொட்டிக்கொடுத்து பார்ப்பான் காலைக் கழுவிக் குடிக்கிறோம்?

என்பதுபோன்ற கேள்விகளுக்கு

பணம் பிடுங்கிப் பார்ப்பனர்

என்ற நூலைப் படியுங்கள்! படித்து மக்களிடையே விளக்குங்கள்! பரப்புங்கள்! இது திராவிட உணர்ச்சியுடைய உங்களின் பொறுப்பும் கடமையுமாம்.

விலை அணா பதினான்கு. கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:—

நாதன் கம்பெனி லிமிடெட் கச்சேரி வீதி, ஈரோடு.

நீங்கள் படித்துவிட்டீர்களா?

திராவிடத்தின் தனிப் பெருந் தந்தை பெரியாரவர்களின் இயல்புகளை, பகுத்தறிவுப் பாசறையின் பழம் பெரும் படைவீரர் தோழர் அழகிரி அவர்கள் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இதோ! பெரியாரில் பெரியார்.

(பகுத்தறிவுப் பதிப்பக வெளியீடு)

விலை அணா ஆறு.

ஏஜண்டுகளுக்கு கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:–

நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி ஈரோடு.

பலசரக்கு மூட்டை.

"குத்தூசி"த் தொகுப்பு.

★

பெரியார் பாராட்டுரையுடன்
விடுதலை வெளியீடு.

160 பக்கம் விலை அணா எட்டு.

எல்லா விடுதலை ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

ஏமாற்று வழியால் இந்தி நுழைகிறதே! என்ன செய்யப்போகிறாய் சூரத் தமிழா!